வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 03 03.06.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 179 பக்கங்கள் : 16




## குளத்தில் நீராடிய மாணவர்களில் 2 பேர் பலி; 2 பேர் அபாய நிலையில்!

### வவுனியாவில் நேற்று துயரம்

வவுனியா, ஜூன் 03

வவுனியா ஈரட்டை பெரியகுளத்தில் நேற்று மதியம் நீராடிய நான்கு மாணவர்களில் இருவர் உயிரிழந்தனர். மற்றைய இருவரும் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

15, 16 வயதுடைய குறித்த நான்கு மாணவர்களும் தமது வளர்ப்பு நாயுடன் குளத்துக்கு சென்றுள்ளனர். நாயைக் குளிப்பாட்டி நீந்திக் கொண்டிருந்த நால்வரும் நீரில் மூழ்கியுள்ளனர்.

குளத்தில் நீராடிக் கொண்டிருந்த ஏனையோர் நீரில் மூழ்கிய மாணவர்களை மீட்கும்

15

## உலகுக்கே உணவளித்த நாட்டை பிச்சை எடுக்க வைத்துவிட்டனர்!

### ஆதிவாசிகளின் தலைவர் சாடல்



கொழும்பு, ஜூன் 03

“உலக நாடுகளுக்கு உணவளித்த எமது நாட்டை பிச்சை எடுக்கும் நிலைக்கு கொண்டு சென்றிருப்பது எமது தேசத் தலைவர்களின் சிறுபிள்ளைத்தனமான வேலை”, என்று ஆதி குடிவாசிகளின் தலைவர் வன்னில அத்தோ குற்றம் சாட்டியுள்ளார்.

சிங்கள இணையம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இந்தக் குற்றச்

15

# தமிழ் தேசிய தரப்புகள் இணைந்து பொது முன்னணியை உருவாக்குக

### முன்னாள் சமாதான தூதுவர் சொல்ஹெய்ம் ஆலோசனை



## சிங்கள, முஸ்லிம் கூட்டிணைவு மூலம் இனப் பிரச்னை தீர்வுக்கும் வலியுறுத்து

திருகோணமலை, ஜூன் 03

“தமிழ்த் தேசியவாத அரசியல் தரப்புகள் அர்த்தபூர்வமான மாற்றங்களுக்காக பொதுவான தமிழ் முன்னணியை உருவாக்க வேண்டும்”,

- இவ்வாறு நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

15

## மின்சாரம் தாக்கி 4 வயது சிறுமி பலி!

கிளிநொச்சி, ஜூன் 03

தொலைக்காட்சி பார்ப்பதற்காக வீட்டில் இருந்த ‘பிளக்கில்’ கைபிடியற்ற ‘ஸ்குரு ட்ரைவரை’ (screwdriver) செலுத்திய 4 வயது சிறுமி மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

கிளிநொச்சி - முழங்காவில் - வெள்ளாங்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

15

## உயர்தர பரீட்சை பிற்போடப்படும்



கொழும்பு, ஜூன். 03

கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை சிறிது காலத்துக்கு பிற்போடப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில்

15

## 6 பில்லியன் டொலர்கள் வருட இறுதிக்குள் தேவை!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 03

இந்த வருட இறுதிக்குள் 600 கோடி அமெரிக்க டொலர்கள் (6 பில்லியன்) நாட்டுக்கு தேவைப்படுகின்றன என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடனை செலுத்த 500 கோடி அமெரிக்க டொலர்களும், வெளிநாட்டு கையிருப்பை வலுப்படுத்த 100 கோடி அமெரிக்க டொலர்களும் தேவைப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## உர இறக்குமதி உரிமை தனியார் வசம் செல்லும்!

கொழும்பு, ஜூன் 03

நாட்டில் எதிர்வரும் பெரும்போகம் தொடக்கம் உர இறக்குமதியில் இருந்து அரசாங்கம் விலகும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி நாட்டுக்குத் தேவையான அனைத்து உரங்களையும் தனியார் வர்த்தகர்கள் ஊடாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்

15

## வேகமாக பரவுகிறது டெங்கு; மட்டு., யாழில் அதிக தாக்கம்!

### தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு

கொழும்பு, ஜூன் 03

தென்மேற்கு பருவ மழை தொடங்கியுள்ள நிலையில் டெங்கு தொற்று வேகமாக பரவி வருகிறது. மே மாதம் மட்டும் 6,483 டெங்கு நோயாளர்கள் பதிவாகினர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த ஆண்டில் மட்டும் 24,523 பேர் டெங்கு தொற்றுக்கு இலக்காகினர். இவர்களில் நேற்று முன்தினம் மட்டும் 313 நோயாளர்கள் பதி

15

## சவேந்திரவின் உரையால் ராஜபக்ஷக்கள் கலக்கம்!

### ஜே. வி. பி. ஆதரவு இணையம்

கொழும்பு, ஜூன் 03

முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பதவியிலிருந்து மாற்றலானபோது ஆற்றிய பிரியாவிடை உரையால் ராஜபக்ஷ குடும்பத்தினர் கலக்கமடைந்துள்ளனர் என்று ஜே. வி. பி. ஆதரவு இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், இராணுவத் தளபதி பதவியில் இருந்து மாற்றலான ஜெனரல் சவேந்திர சில்வா கடந்த செவ்வாய்க்கிழமை

15

## கச்சதீவை மீளப்பெறாமல் இரு தரப்பு பேச்சு அவசியம்!

### சீ. வீ. கே. சிவஞானம் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 03

“கச்சதீவை தமிழகம் மீள பெறுவதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிப்படையும் என்பதனை தமிழக முதல்வர் அனுதாபத்துடன் அணுகி கச்சதீவை மீளப்பெறுவதற்கான விடயங்களை வலியுறுத்தாது இரு சாராரிடமும்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது…!

கல்லில் சிலை வடிக்கும் சிற்பி ஒருவன் ஒரு தேவதையின் சிலையை வடித்துக்கொண்டிருந்தான். அற்புதமாக, தத்ரூப மாகத் தோற்றமளித்த அந்தச் சிலையை வடித்து முடித்த கணம், ஒரு மின்னல் நேரத்தில் அந்தச் சிலை உயிர் பெற்றது. தேவதை மகிழ்ச்சியுடன் சிற்பியின் கலைத் திறனைப் பாராட்டி, வேண்டிய வரம் ஒன்று கேட்குமாறு சொன்னது.

சிற்பிக்கு, வல்லவர்களுக்கு வல்லவனாக வேண்டும் என்ற வெகுநாள் ஆசை. அவன் அதை தேவதையிடம் சொன்னான். தேவதை அன்புடன் சிரித்துக் கொண்டே, "சிற்பியே! நன்கு சிந்தித்துத்தான் கேட்கிறாயா?" என்று கேட்டது. சிற்பியும் மிகுந்த ஆவலுடன், "ஆம்!" என்றான்.

தேவதை "சரி! அடுத்த இரண்டு நாட்களுக்கு நீ யாரை அல்லது எதை வல்லவன் என்று நினைக்கிறாயோ அதுவா கவே மாறிவிடுவாய்" என்று வரம் அளித்து விட்டு, அதே மின் னல் வேகத்தில் மறுபடியும் சிலை வடிவிற்குப் போய்விட்டது,

சிற்பி திடீரென்று நிகழ்ந்த இந்த நிகழ்வைப்பற்றி நம்புவதா வேண்டாமா என்று தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டே தன் வேலையைத் தொடர்ந்தான்.

சூரியன் உச்சிக்கு வந்து வெய்யில் தகித்துக்கொண்டிருந் தது. சிலை வடிக்கும் கருங்கற்பாறை கொதித்தது. கல்லைக் கொத்தும் உளி கொதித்தது. சிற்பியின் உடலெல்லாம் வியர்த்து வழிந்தது. சிற்பி, 'இந்த சூரியன் மிகச் சக்தி படைத் தவனாக இருக்கிறானே. எல்லாவற்றையும் ஆட்டிப் படைக் கிறானே! இவன்தான் மிக வல்லவனாக இருக்க வேண்டும்' என்று நினைத்தான். என்ன ஆச்சரியம்! உடனே அவன் தேவதை கொடுத்த வரத்தின் சக்தியால் சூரியனாகவே மாறி விட்டான்.

சிறிது நேரம் உலகைச் சுற்றிவந்து தனது சக்தியால் ஆனந்த மாக கண்ணில் பட்ட எல்லாவற்றையும் தகிக்கச் செய்து மகிழ்ந்துகொண்டிருந்தான்.

ஓர் இடத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன. அவை சூரியனின் கதிர்களை மறைத்தன. ஆகவே, அவை மறைத்த இடங்களை சூரியக் கதிர்கள் சென்றடைய முடியவில்லை. சூரியனாக இருந்த சிற்பி, தன் மிக உக்கிரமான கதிர்களை அந்த மேகங்கள்மேல் செலுத்திப் பார்த்தான். அந்தக் கருமேகக் கூட்டங்கள் அசைவ தாக இல்லை. 'என்ன... இந்த மேகக் கூட்டங்கள் சூரியனின் சக்திமிக்க கதிர்களையே மறைக்கும் வல்லமை படைத்தவை யாக இருக்கின்றனவே' என்று நினைத்தவுடன் அவன் அந்தக் கருமேகங்களாக மாறிவிட்டான்.

சிறிது நேரம் மகிழ்ச்சியாக சூரியக் கதிர்களை மறைத்துக் கொண்டு ஆனந்தப் பட்டுக்கொண்டிருந்தான். அப்போது பலமாகக் காற்றடித்தது. அந்தக் காற்று, மேகக் கூட்டங்களை இப்படியும் அப்படியுமாக அலைக்கழித்தது. சிற்பி எவ்வளவு முயன்றும் காற்றின் வேகத்திற்கு எதிராக எதையும் செய்ய முடியவில்லை. 'சூரியனின் கதிர்களை மறைக்கும் மேகத் தையே அசைக்கும் காற்று எவ்வளவு வல்லமை படைத்ததாக இருக்கவேண்டும்' என்று நினைத்தான். அந்தக் கணமே அவன் காற்றாக மாறிவிட்டான்.

காற்று வடிவில் சிற்பி தென்றலாகவும், புயலாகவும் எண் ணப்படி மாறிமாறி உலகைக் கலக்கிக்கொண்டிருந்தான். மிக வும் வல்லமை படைத்தவனாகத் தன்னைப்பற்றி எண்ணி எண்ணி, நினைத்த இடத்திற்கெல்லாம் சடுதியில் சென்று மகிழ்ச்சியில் திளைத்துக்கொண்டிருந்தான். அவன் ஒருமுறை அப்படிக் கடும் புயலாக மாறிச் சென்று கொண்டிருந்த வழியை மறித்துக்கொண்டு ஒரு நெடிதுயர்ந்த மலை நின்று கொண்டிருந்தது. எவ்வளவோ உக்கிரமாக முட்டி மோதிப் பார்த்தும் கடும் புயலாய் வடிவெடுத்திருந்த சிற்பியால் அந்த மலையைக் கடந்து செல்ல முடியவில்லை. 'அட.. இந்த மலைக்குக் கடும் புயலையும் மிஞ்சும் சக்தி இருப்பது முன்னமேயே நமக்குத் தெரியாமல் போய் விட்டதே!' என்று நினைத்த மாத்திரம், அவன் ஒரு மலையாக மாறிவிட்டான்.

அப்போது மற்றொரு சிற்பி அந்த மலைமேல் மெதுவாக ஏறி வந்தான். அவன் ஓர் இடத்தில் உள்ள மலையின் பாறைகளைத் தேர்ந்தெடுத்து, தன் உளியையும் சுத்தியலையும் கொண்டு பாறையைப் பிளந்து சிலை வடிக்க ஆரம்பித்தான். மலை வடிவில் இருந்த சிற்பி, 'சக்தி வாய்ந்த மலையின் பாறைகளையே பிளக்கும் சிற்பிதான் மலையை விட வல் லவன்' என்று நினைத்தான்.

தேவதையின் வரம் பாக்கியிருக்கிறதே! அதனால், அப்படி நினைத்த மாத்திரத்தில் பழைய படி அவன் தன் சுய உருவை அடைந்து விட்டான்.

இந்தக் கதையை வாசகர் ஒருவர் மின்அஞ்சலில் அனுப் பியிருந்தார்.

'எதற்காக அனுப்பினேன் என்பதை நீங்கள் புரிந்துகொள் வீர்கள். நம்மவர்கள் சிலர் எது பலமானது என்று நினைக்கின் றார்களோ அதாவது, யார் பலமானவர்கள் என்று நினைக் கின்றார்களோ அவர்கள் பின்னால் சென்றுகொண்டிருக்கிறார் களே தவிர, தங்களால் முடிந்ததை தங்களுடைய மக்களுக்காக செய்வதாகத் தெரியவில்லை' என்ற தனது குறிப்போடு.

அவர் யாரைப்பற்றி, எதைப்பற்றி சொல்கிறார் என்று எனக் குப் புரியவில்லை. உங்களுக்காவது புரிகின்றதோ தெரிய வில்லை.

- ஊர்க்குருவி

## இன்றைய பேராபத்து குறித்து 2020இலேயே எச்சரித்தேன்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜுன் 03

"இன்று நாடு வீழ்ச்சிய டைந்து கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளது. இந்த அழிவு ஏற்படும் என நான் கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்தே நாட்டுக்கு வெளிப் படுத்தினேன்." - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சுதேச மற்றும் பாரம்பரிய வைத்தியர்களின் குழுவொன்று எதிர்க்கட்சித் தலைவரை நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துத் தாம் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடினர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:-

"அரசு ஆட்சிக்கு வந்தவுட னேயே குபேரர்களுக்கு வழங் கப்பட்ட வரிச்சலுகையால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. இவ்வாறு வரிச்சலுகை பெற்ற செல்வந்தர்கள் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அது தொடர்பாக அதிசயமாகப் பேசினர்.

சுதேச மருத்துவமும் பாரம் பரிய மருத்துவமும் காலம் காலமாக நம் நாட்டில் மதிப்பு மிக்க தொழிலாக இருந்து வரு கின்றது. இன்று உண்மை வென்று வருகின்றது. உண் மையை வென் றெடுப்பதற்கு மக்கள் கஷ்டப் பட வேண்டியுள்ளமை துரதிஷ் டவச மானது" - என்றார். (ஐ)

## 16,000 எரிவாயு சிலிண்டர்கள் இன்றும் விநியோகிக்கப்படும்!

கொழும்பு, ஜுன் 03

இன்றைய தினம் 16,000 சமை யல் எரிவாயு சிலிண்டர்கள் நாடளாவிய ரீதியில் விநியோ கிக்கப்படும் என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த எரிவாயு கொள் கலன்களை விநியோகிக்கும் விநியோகஸ்த்தர்கள் தொடர் பான விபரங்களை லிட்ரோ நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள பக்கத்தில் பார்வையிட முடியும் எனவும் அந்நிறுவனம் குறிப்பிட் டுள்ளது.

3,950 மெற்றிக் தொன் எரி வாயு அடங்கிய குறித்த கப்பல் கடந்த வார இறுதியில் நாட்டை வந்தடைந்த நிலையில் அதிலி ருந்து எரிவாயுவை தரையிறக் கும் நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டிருந்தன.

இதனடிப்படையில், நேற்று முன்தினம் முதல் சமையல் எரி வாயு விநியோகம் வழமைக்கு திரும்பியிருந்தது. (ஐ)

## ஐந்து மாதங்களில் மட்டும் 288,645 பேருக்கு கடவுச்சீட்டு!

கொழும்பு, ஜுன் 03

முதல் ஐந்து மாதங்களில் 288,645 கடவுச்சீட்டுக்கள் வழங்கப் பட்டுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்ல இந்த வரு டத்தின் முதல் ஐந்து மாதங்களில் 288,645 பேர் தமது கடவுச்சீட்டு களை பெற்றுள்ளனர் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பேச்சாளர் பியூமி பண்டார தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்து பலர் வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடியுள்ளனர் என்றும், இதனால் அதிகமானோர் கடவுச்சீட்டை பெற்றுக்கொள் ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இந்த வருடம் ஜனவரியில் 52,278, பெப்ரவரியில் 55,381, மார்ச் மாதம் 74,890, ஏப்ரலில் 53,151, மே மாதம் 52,945 ஆகிய கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

நாளாந்தம் முன்பதிவு செய்யாதவர்களால் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தைச் சுற்றி பல கிலோமீற்றர் தூரம் வரிசை கள் காணப்படுவதாகவும், நாளாந்தம் 1500க்கும் அதிகமானோர் சேவையாற்றி வருகின்றனர் என்றும் ஊடகப் பேச்சாளர் தெரி வித்தார்.

## 2022ஆம் ஆண்டு மூன்றாம் தவணை டிசெம்பர் 23ஆம் திகதிவரை நீடிக்கும்

கொழும்பு, ஜுன் 03

2023 ஆம் ஆண்டு பாட சாலைகள் ஆரம்பிக்கப்படுவ தற்கு முன்னர் 2022ஆம் ஆண் டுக்கான மூன்றாம் பாடசாலை தவணை 2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி வரை நடைபெற அதிக வாய்ப் புகள் உள்ளதாக கல்வி அமைச் சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்தார்.

பாடசாலை சீருடை விநி யோகம் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக் களத் தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சுசில் பிரேம ஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.

2021ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து செயல்முறைப் பரீட்சைகளும் ஜுலை 10ஆம் திகதி நிறைவடையும் என எதிர் பார்க்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரி வித்துள்ளார். (அ)

## தெணியானுக்கு அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுன் 03

அண்மையில் காலமான ஈழத்தின் புகழ்பெற்ற எழுத்தா ளரும் சமூக ஒடுக்குமுறைகளை எதிர்ப்பதில் முன்னின்றவரு மான தெணியானுக்கான அஞ்சலி நிகழ்வு நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கே. கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட் போர் கூடத்தில் இடம்பெற வுள்ளது.

எழுத்தாளர் மு. அநாதரட்ச கன் தலைமையில் இடம்பெற வுள்ள இந்த நிகழ்வில் அஞ்சலி உரைகளை எழுத்தாளர் க. தணிகாசலம், ஆய்வாளர் கலா நிதி சு. குணேஸ்வரன், யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ் கண்ணன், ஆய்வாளர் கலாநிதி ந.இரவீந்திரன், எழுத்தாளர் சட்டத்தரணி சோ. தேவராஜா, எழுத்தாளர் ஐ. சாந்தன், பொதுவுடமைச் செயல்பாட் டாளர் சி. கா. செந்திவேல் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

அனைவரையும் இவ் அஞ் சலி நிகழ்வில் இணைந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர். (ஐ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜுன் 03

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத் திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த் தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் இன்று வெள்ளிக் கிழமை காலை 6.30 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை கோட் டம் கட்டுஞான வைரவர் கோவிலின் பிரதம குருக்கள் பிரமஸ்ரீ சா.கோபாலசர் மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தின் தமிழ் சேவையில் நேரடி யாக ஒலிபரப்பாகும். (ஐ)

## பெருந்திருவிழா

வடமராட்சி, ஜுன் 03

நெல்லியடி - தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் இந்தப் பெருந் திருவிழாவில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற வுள்ளன. (ஐ-2)

ஈழநாடு
Eelanadu
03.06.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தூரநோக்கற்ற தலைவர்களை கொண்டிருக்கும் நாடு?

நோர்வேயின் முன்னாள் அமைச்சரும், இலங்கையின் சமாதான பேச்சின் பிரதான ஏற்பாட்டாளருமான, எரிக் சொல்ஹெய்ம், திருகோணமலையில் இயங்கிவரும் சிந்தனைக் கூடமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் - சிங்கப்பூரில் லீ குவான் யு, இந்தியாவில் நரேந்திர மோடி போன்ற தூர நோக்குடன் சிந்தித்து, செயலாற்றக் கூடிய தலைவர்களை இலங்கை மக்கள் பெற்றிருக்கவில்லை - இதன் காரணமாகவே, இப்போதும் இலங்கை பிரச்னைகளுக்குள் இருந்து வெளியில் வரமுடியாமலிருக்கின்றது - என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

சொல்ஹெய்ம் குறிப்பிடுவது சரியானதுதான். இலங்கையின் தலைவர்கள் என்று கருதப்பட்டவர்கள் அனைவரும் அடுத்த தேர்தலில் எப்படி வெற்றி பெறுவதென்று சிந்தித்தார்களேயன்றி. அடுத்த தலைமுறைக்கான இலங்கையை எவ்வாறு கட்டியெழுப்பதென்று சிந்திக்கவில்லை. இதன் காரணமாகவே, நாடு இன்று கையேந்தும் நிலையில் இருக்கின்றது.

ஒரு காலத்தில், இலங்கையை போன்று, சிங்கப்பூரை கட்டியெழுப்ப வேண்டுமென்று லீ குவான் யு கனவு கண்டிருந்தார். ஆனால், இன்றோ, இலங்கையை, சிங்கப்பூருடன் ஒப்பிட்டுப் பேசுவதே அபத்தமென்னும் நிலைமை உருவாகியிருக்கின்றது. லீ குவான் யு, தனது நாட்டை எவ்வாறு தன்னிறைவான நாடாக மாற்றுவதென்று மட்டுமே சிந்தித்தார். அதற்கு எதுவெல்லாம் தடையாக இருக்குமோ, அவற்றை, அகற்றுவது பற்றி மட்டுமே சிந்தித்தார். ஆனால், இலங்கையின் நவீன அரசியலை வடிவமைத்தவர்கள்- என்று கருதப்படும் சேனநாயக்கக்களும், பண்டாரநாயக்கக்களும், தங்களுடைய கட்சியை எவ்வாறு வெற்றிபெறச் செய்வது, அதற்கு எதையெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாமென்று மட்டுமே சிந்தித்திருந்தனர். இதன் விளைவுகளைத்தான் இப்போது இலங்கைத் தீவு எதிர்கொண்டிருக்கின்றது.

சிங்கள மக்களால் மாறிமாறி ஆட்சிபீடத்துக்கு தெரிவான தலைவர்கள் எவருமே, இலங்கையை எவ்வாறு கட்டியெழுப்பலாமென்று, ஒருபோதுமே சிந்தித்திருக்கவில்லை. மாறாக, சிங்களவர்களின் அறியாமையையும் மக்கள் மத்தியில் மதம், இனம் தொடர்பில் காணப்படும் இயல்பான ஆர்வங்களையும் பயன்படுத்தி, தங்களின் கதிரையை பாதுகாத்துக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிய எஸ். டயிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியை விழுத்தி, அதிகாரத்திற்கு வருவது பற்றி மட்டுமே சிந்தித்தார். அதன் பின்னர் வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை வீழ்த்தி எவ்வாறு அதிகாரத்துக்கு வருவது என்பது தொடர்பிலேயே சிந்தித்தனர். எவருமே நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையான தீய சக்திகளை வீழ்த்தி, நாட்டை எவ்வாறு கட்டியெழுப்பவது என்பது தொடர்பில் ஒருபோதுமே சிந்தித்திருக்கவில்லை.

சிங்களத் தலைவர்களின் தவறான அரசியல் நிலைப்பாடுகள் காரணமாகவே, நாடு உள்நாட்டு யுத்தத்துக்குள் வீழநேர்ந்தது. ஆரம்பகால தமிழ் தலைவர்கள் சமஷ்டி பற்றி பேசிய போதிலும், அதனை ஒரேயோரு நிலைப்பாடாகப் பற்றிக்கொள்ளவில்லை. இறங்கிச் செல்லவும், விட்டுக் கொடுப்புக்களுடன் பேசவும் தயராகவே இருந்தனர். இந்த பின்புலத்தில்தான், பண்டா-செல்வா உடன்பாடு இடம்பெற்றது. அது சமஷ்டிக்கான உடன்பாடல்ல.

ஆனாலும், அதனையும் கட்சியின் அரசியல் நலனுக்காக பண்டாரநாயக்க கிழித்து வீசினார். பின்னர், டட்லி - செல்வா உடன்பாடும் கிழித்துவீசப்பட்டது. இதன் விளைவாகவே தமிழ் பிரிவினைவாதம் தலைதூக்கியது. ஆனால், லீ குவான் யு சிங்கப்பூரின் இனங்களின் மனஉணர்வை துல்லியமாக மதிப்பிட்டு, இனக் கொள்கையை புறம்தள்ளும் வகையில், செயல்பட்டதன் விளைவாக, இனங்களுக்கு இடையிலான பிரச்னைக்கான அவசியம் அங்கு இல்லாமல் போனது. ஏனெனில், அவரிடம் நாட்டைப் பற்றிய தூர நோக்கம் இருந்தது. இதனை சிங்கள மக்கள் உணராதவரையில் இந்த நாடு, எந்தக் காலத்திலும், அரசியல் ஸ்த்திரத்தன்மையோடு இருக்கப் போவதில்லை. தற்காலிகமான தீர்வுகளை மட்டுமே இந்த நாடு காணமுடியும். ஆனால், மீளவும் அதே பிரச்னைகளை வேறு வடிவங்களில் நாடு எதிர்கொள்ளும்.

# சிறப்பு முகாம் என்ற 'தடுப்பு காவல் சிறை'!

**அலசுவது இராஜதந்திரி**



இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு பாதுகாப்புத்தேடி சென்ற அகதிகள், தற்போது ஏறத்தாழ இலங்கையில் தடுப்புக் காவல் சிறைகளிலிருப்போரின் நிலை போன்றே தமிழ்நாடு திருச்சிராப்பள்ளியிலுள்ள சிறப்பு முகாமில் இருந்து வருகின்றனர்.

தமது அவல நிலையை எடுத்துக்காட்டி தம்மை தடுப்புக்காவல் கைதிகள் போல நடத்த வேண்டாம் என்று கோரி அவர்கள் சாகும் வரை உண்ணாவிரதத்தையும் ஆரம்பித்துள்ளனர்.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளின் நிலையைப் பொறுத்தவரை மிக இக்கட்டான நிலையில் அவர்கள் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. எண்பதுகளின் ஆரம்பத்தில் இலங்கையில் வடக்கு - கிழக்கு பிரச்னை சூடுபிடித்தபோது தமது உயிரையும் பொருட்படுத்தாது ஆயிரக்கணக்கில் தமிழகம் நோக்கி இலங்கையின் வடக்கு - கிழக்கு அகதிகள் பாக்கு நீரிணை வழியாக செல்லத் தொடங்கினர்.

இந்தியாவில் ஏறத்தாழ ஒரு இலட்சம் இலங்கை தமிழ் அகதிகள் இருந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் இலங்கையில் மூன்று தசாப்தகால வடக்கு - கிழக்கு யுத்தம் முனைப்படைந்தபோது பல்வேறு கட்டங்களிலும் தமிழகம் நோக்கி வந்தவர்கள்.

எண்பதுகளில் தமிழகம் ஊடாக இந்தியா வந்தடைந்த அகதிகளை தமிழகம் வரவேற்று உபசரித்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கியிருந்தது. எனவே, அன்று தமிழகம் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு பாதுகாப்பாக புகலிடம் வழங்கியிராதபட்சத்தில் இலங்கையில் அவர்களின் நிலை இடம்பெயர்வுகளோடு மோசமடைந்திருக்க முடியும்.

இலங்கையில் யுத்த கெடுபிடிகள் முடிவுக்கு வந்துள்ள நிலையில் தம்மை மீளவும் இலங்கைக்கு அனுப்ப வேண்டும் அல்லது விசேட முகாம்களிலிருந்து வெளியே சென்று சுதந்திரமாக நாடமாடி தமது வாழ்வா தாரத்தை தேட அனுமதிக்க வேண்டும் என்று திருச்சிராப்பள்ளி விசேட முகாமில் இருக்கின்ற இலங்கைத்தமிழ் அகதிகள் கேட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு செப்ரெம்பரில் திருச்சி சிறப்பு முகாமில் இருந்து வருகின்ற இலங்கை தமிழ் அகதிகளைச்சேர்ந்த 29 இளைஞர்கள் தற்கொலை முயற்சியிலும் இறங்கியிருந்தனர்.

திருச்சி விசேட முகாமில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புகளைப் பேணியவர்கள் என்று கைதானவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழகத்தின் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்குப்பொறுப்பான "கியூ" பிரிவு பொலிஸாரின் இடையறாத கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இதன்காரணமாகவே தற்போது இலங்கைத் தமிழ் அகதிகள் திருச்சிராப்பள்ளி சிறப்பு முகாமிலிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென கோரி வருகின்றனர்.

இந்தக் கோரிக்கையை ஆதரித்து தமிழக பாட்டாளி மக்கள் கட்சி தலைவரான மருத்துவர் அன்புமணி ராமதாஸ் குரல் கொடுத்துள்ளார்.

பெயரளவில் மட்டுமே சிறப்பு முகாம் என்று குறிப்பிடப்பட்டாலும் திருச்சிராப்பள்ளி மத்திய சிறைக்குள்ளளேயே இந்த சிறப்பு முகாம் காணப்படுகின்றது. கடந்த சில தினங்களாக தம்மை விடுதலை செய்யக் கோரி இங்குள்ள இலங்கை தமிழ் அகதிகள் சிலர் சாகும் வரை உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர். இவர்களில் மூவரின் நிலை கவலைக்குரியதாக இருக்கின்றதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திருச்சிராப்பள்ளியிலுள்ள இலங்கை அகதிகளுக்கான சிறப்பு முகாமை மூடவேண்டுமென்ற கோரிக்கை வலுவடைய ஆரம்பித்துள்ளபோதிலும் நீண்ட காலமாகவே தமது வாழ்வின் குறிப்பிடத்தக்களவு காலப்பகுதியைத் தொலைத்துவிட்டுள்ள, திருச்சி சிறப்பு முகாம்களிலுள்ள இலங்கை தமிழ் அகதிகளின் எதிர்காலம் குறித்து விரைவான முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியமானதாகும்.


இதுவிடயத்தில், தமிழ்நாடு மாநில அரசையோ அல்லது இந்திய மத்திய அரசையோ மட்டும் நம்பி இருக்காது சர்வதேச அனுசரணைகளையும் பெற முடியும். குறிப்பாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான யு. என். எச். சி. ஆர். அமைப்பையும் இணைத்து தமிழகத்தின் திருச்சி இலங்கை அகதிகள் சிறப்பு முகாமிலுள்ளவர்கள் சம்பந்த மாக ஆக்கபூர்வமான முடிவுகளை தமிழக மாநில அரசு மற்றும் இந்திய மத்திய அரசின் உதவி யோடு இலங்கையின் வடக்கு - கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுக்க வேண்டும.

இதேவேளை, தற்போது இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரை மொத்தம் 83 இலங்கை அகதிகள் வட பகுதியிலிருந்து தமிழகத்தை சென்றடைந்துள்ளனர்.

எனவே, ஒருபுறம் திருச்சிராப்பள்ளி சிறப்பு முகாமிலிருக்கும் இலங்கை தமிழ் அகதிகள் தமக்கான விடுதலை கோரி குரல் எழுப்பி வருகின்ற அதேசமயம், புதிதாக தமிழகம் வந்தடையும் தமிழ் அகதிகள் குறித்து முடிவு களை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தமிழக அரசு உள்ளாகியுள்ளது.

இதுவிடயத்தில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற இலங்கை தமிழர்களின் உதவி ஒத்தாசையையும் கோரமுடியும். இந்த மனிதாபிமானப் பிரச்னை விடயத்தில் தமிழக அரசோடு இலங்கையின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் செயலில் இறங்குவதே காலத்தின் தேவையாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
திட்டமிட்டு செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பாராத செலவு உண்டாக வாய்ப்புண்டு. வரவுகள் மகிழ்ச்சிதரும். புதிய நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை.

**இடபம்**
உடலில் பாதிப்பு தோன்றும். உணர்ச்சி வசப்பட வேண்டாம். பேச்சில் கவனம் தேவை. உங்களைக் கோபப்படுத்தும் வகையில் சிலர் செயல்படலாம். அமைதி காப்பது நன்மை தரும்.

**மிதுனம்**
மனக்குழப்பத்திற்கு இடமளிக்க வேண்டாம். திட்டமிட்டு செயல்பட்டால் வெற்றி உண்டு. எதிர்பார்த்த வற்றில் ஆதாயம் காண்பீர்கள். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். குழப்பங்கள் விலகும்.

**கடகம்**
புதிய முயற்சிகளில் கவனம் செல்லும். எதிர்பார்ப்பு நிறைவேறும். ஆடம்பர செலவால் பணம் கரையும். யோசித்து செயல்படவும். தந்தைவழியில் ஆதரவு அதிகரிக்கும்.

**சிம்மம்**
வராமல் இருந்த பணம் வசூலாகும். எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். நண்பர்களால் உங்கள் தேவைகளை அடைவீர்கள். மகிழ்ச்சியான நாள். உங்களுடைய வாக்கிற்கு மதிப்பு கிடைக்கும்.

**கன்னி**
தொழில் முயற்சி வெற்றி பெறும். வியாபாரத்தில் புதிய அணுகுமுறையைக் கடைபிடிப்பீர்கள். வருமானம் கூடும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பர். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும்.

**துலாம்**
எதிர்பார்த்த நன்மை கிடைக்காமல் போகும். பணத்தால் உங்கள் தேவையை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்கள் முயற்சி இழுபறியாகும். எச்சரிக்கை தேவை. குழப்பம் ஏற்படும்.

**விருட்சிகம்**
புதிய முயற்சி எதிலும் ஈடுபாட வேண்டாம். வீண் விவகாரங்களில் தலையிடுவதால் பிரச்சனை உருவாகும். நீங்கள் நினைப்பது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும்.

**தனுசு**
நட்புகளின் வழியே நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும். பணவரவு உண்டு. குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணை மீது அக்கறை கொள்வீர்கள்.

**மகரம்**
உடலில் இருந்த சங்கடம் விலகி உற்சாகமுடன் செயல்படுவீர்கள். செல்வாக்கு கூடும். எதிரிகளுக்கு பாடம் புகட்டுவீர்கள். நினைத்ததை அடைவீர்கள். முயற்சியில் வெற்றி உண்டாகும்.

**கும்பம்**
வரவை விட செலவு அதிகரிக்கும். உங்கள் செயல்களில் தடைகளும் தாமதமும் ஏற்படும். உங்கள் உழைப்பிற்கு மதிப்பில்லாமல் போகும். எதிர்பார்த்தவற்றில் நன்மை கிடைக்காது.

**மீனம்**
எதிர்பாராத வேலையால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். குடும்பத்தினரால் சங்கடத்தை அடைவீர்கள். மற்றவர்கள் குறை சொல்வார்கள். குடும்பத்தினரும் உங்களுடன் மோதல் போக்கைக் கடைபிடிப்பர்.

# கச்சதீவை மீட்பதற்கு இது சரியான தருணம்!

## விஜயகாந்தின் கட்சியும் தீர்மானம்!

சென்னை, ஜூன் 03

இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்டு எடுக்க சரியான தருணம். எனவே, மத்திய அரசுக்கு உரிய அழுத்தத்தைக் கொடுத்து கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும்" என்று விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தே. மு. தி. கவின் மாவட்ட செயலாளர்கள் ஆலோனை கூட்டம் நேற்று கட்சியின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் சென்னையிலுள்ள தலைமைக் கழகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர். இந்த கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில், தமிழக மீனவர்களுக்கு தொடர்ந்து உயிர் சேதமும், பொருள் சேதமும் நடந்து கொண்டிருக்கிறது. மேலும் மீனவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு தருவது. ஏற்கனவே இலங்கையிடம் இருக்கும் படகுகளை மீட்டு எடுத்து தமிழக மீனவர்களிடம் ஒப்படைப்பது. இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்டு எடுக்க சரியான தருணம். எனவே, மத்திய அரசுக்கு உரிய அழுத்தத்தைக் கொடுத்து கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும் - என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

# முருகனுக்கான சிறை விடுப்பை தமிழக அரசு பரிசீலிக்கவில்லை!

## உயர் நீதிமன்றில் நளினி முறையீடு

சென்னை, ஜூன் 03

மருத்துவ காரணங்களுக்காக கணவர் முருகனுக்கு 6 நாட்கள் சிறை விடுப்பு (பரோல்) வழங்கக் கோரி அவரின் மனைவி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக உள்ள நளினி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், 'ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் எனக்கு தமிழக அரசு சிறை விடுப்பு வழங்கியதால் தாய் பத்மாவுடன் தங்கியிருக்கிறேன். ஆனால், வேலூர் சிறையில் இருக்கும் எனது



கணவர் முருகனுக்கு சிறை விடுப்பு வழங்கப்படவில்லை. 31 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவிக்கும் எங்களை விடுதலை செய்வது தொடர்பான தமிழக அமைச்சரவை தீர்மானத் தின்படி எங்களை இன்னும் விடுதலை செய்யவில்லை.

எனவே, மருத்துவ காரணங்களுக்காக கணவர் முருகனை 6 நாட்கள் சிறை விடுப்பில் செல்ல அனுமதிக்கக் கோரி கடந்த மே 26ஆம் திகதி நானும், மே 21 ஆம் திகதி எனது தாய் பத்மாவும் தமிழக அரசிடம் மனுக்களை அளித்தோம்.

அந்த மனுக்கள் இதுவரை பரிசீலிக்கப்படவில்லை. எனவே, எனது கணவர் முருகனை 6 நாட்கள் சிறை விடுப்பில் செல்ல அனுமதிக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கோரியிருந்தார். இந்த மனு இன்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வரவுள்ளது. (ஐ)

# பா.ஜ.கவில் சசிகலாவா? மேலிடமே முடிவு செய்யும்!

## தமிழக தலைவர் அண்ணாமலை

சென்னை, ஜூன் 03

பா. ஜ. கவில் சசிகலாவை ஏற்பது குறித்து கட்சி மேலிடம்தான் முடிவு செய்யும் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

முன்னதாக பா.ஜ.க.வின் சட்டமன்ற தலைவர் நயினார் நாகேந்திரன், பா.ஜ.கவுக்கு சசிகலா வந்தால் வரவேற்க தயாராக இருக்கிறோம் என்று கூறியிருந்தார். இது தொடர்பில் பா.ஜ.கவின் தமிழக தலைவர் அண்ணாமலையிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்திருந்தார்.

மேலும், பா. ஜ. கவுக்கு சசிகலா வந்தால் வரவேற்போம் என



நயினார் நாகேந்திரன் கூறியிருப்பது அவரின் தனிப்பட்ட கருத்து. இது தனி ஒரு மனிதன் முடிவெடுக்கக்கூடிய விசயம் கிடையாது. இதுபோன்ற நிகழ்வு நடக்குமேயானால், அது தொடர்பாக டில்லியில் உள்ள தலைமைக் குழுவின் ஆலோசனைப் படியே முடிவெடுக்கப்படும்" என்று கூறினார். (ஐ)

# மாநிலங்களவை தேர்தல் கட்சிகளின் மனுக்கள் ஏற்பு

சென்னை, ஜூன் 03

தமிழகத்தில் 6 மாநிலங்களவை இடங்களுக்கான வேட்புமனு பரிசீலனையில், தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் 6 பேரின் மனுக்கள் ஏற்கப்பட்டன. சுயேச்சை வேட்பாளர்கள் 7 பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

தமிழகத்தில் இருந்து தேர்வுசெய்யப்பட்ட 6 மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும் 29ஆம் திகதி முடிகிறது. இதையடுத்து, புதிய உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கடந்த மே 24ஆம் திகதி வேட்புமனு தாக்கல் தொடங்கி, மே 31ஆம் திகதி முடிவடைந்தது.

இதில் போட்டியிட 13 பேர் மனுக்களை தாக்கல் செய்தனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பரிசீலணையில், தி. மு. க., காங்கிரஸ், அ.தி. மு.க. கட்சியின் மனுக்கள் ஏற்கப்பட்டன. இதனால், இவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

# எரிபொருள் தட்டுப்பாட்டினால் மீனவர்கள், விவசாயிகள் பதிப்பு

## உதவுமாறு இந்தியாவிடம் கோரிக்கை



**மன்னார், ஜூன் 03**

**மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலும் வாழும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதார தொழிலாக மீன்பிடி மற்றும் விவசாயம் ஆகிய இரு தொழில்களிலும் ஈடுபட்டு அதனூடாக தங்களது வாழ்வாதாரத்துக்கு தேவையான வருமானத்தை பெற்று வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.**

எனினும் குறித்த இரு மாவட்டங்களிலும் குறித்த தொழிலை மேற்கொண்டு வருகிறவர்களுக்கு தமது தொழில் நடவடிக்கைகளுக்கு தேவையான மண்ணெண்ணெயை உரிய முறையில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கைக்கான இந்தியத் தூதருக்கு நேற்று வியாழக்கிழமை காலை அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலும் வாழும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதார தொழிலாக மீன்பிடி மற்றும் விவசாயம் ஆகிய இரு தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த கடற்தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு மட்டும் 78 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய்யும் முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 31 ஆயிரத்து 180 லீற்றர் மண்ணெண்ணெய்யும் தேவை என தெரிய வருகின்றது.

அரச தரவுகளின் அடிப்படையில் குறித்த அளவு எரிபொருள் தேவை என்பதை மேற்காட்டி நான் வலியுறுத்தி கூற விரும்புகிறேன்.

இந்த தேவையை முறையே பெற்று தமது வாழ்வாதாரத்தை எவ்விதமான தடையும் இன்றி முன்னெடுத்து செல்ல முடியாத நிலைமை இவ் இரு மாவட்டங்களிலும் காணப்படுகின்றது.

எனவே மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களையும் சேர்ந்த மீனவர்கள் மற்றும் விவசாயிகள் தொடர்ச்சியாக பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர்.

எனவே மண்ணெண்ணெய் பிரச்னைக்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (அ)





# தமிழக அரசின் உதவிப்பொருட்கள் நேற்று வவுனியாவை வந்தடைந்தன

வவுனியா, ஜூன். 03

தமிழக அரசினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட உதவி பொருட்கள் நேற்றுக் காலை ரயில் ஊடாக வவுனியாவை வந்தடைந்தன.

இந்த உதவிப் பொருட்கள் வசதியற்ற தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் வவுனியா பிரதேச செயலகத்துக்கு 12015, வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு 3560, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்துக்கு 2000, வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு 4675 உணவுப் பொதிகள் என வவுனியா மாவட்டத்துக்கு மொத்தம் 22,250 குடும்பங்களுக்கான பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்த உணவுப் பொதிகளை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் பொறுப்பேற்றுக்கொண்டு குறித்த பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் கையளித்தனர். (அ)

# டீசல் இறக்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 03

நாட்டை வந்தடைந்த டீசல் கப்பலில் இருந்து டீசலை இறக்கும் பணி தற்போது நடைபெறுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எரிபொருள் கையிருப்புக்கள் தொடர்பில் அவர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவு ஒன்றை பதிவிட்டு இதனை தெரிவித்துள்ளார்.

இதன்படி,

டீசல் 18,825 மெற்றிக் தொன், சுப்பர் டீசல் 42 மெற்றிக் தொன், 92 ஒக்டேன் பெற்றோல் 9209 மெற்றிக் தொன், 95 ஒக்டேன் பெற்றோல் 13,067 மெற்றிக் தொன் மற்றும் விமான எரிபொருள் 386 மெற்றிக் தொன் கையிருப்பில் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ)

# எல்பிட்டிய பகுதி வீடொன்றில் குண்டுவெடிப்பு

கொழும்பு, ஜூன். 03

காலி மாவட்டம் எல்பிட்டிய பகுதியில் வீடொன்றில் நேற்று இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் வீட்டு உரிமையாளர் காயமடைந்தார்.

கட்டபொல, நாகஹதென்ன கிராமத்திலேயே நேற்று முற்பகல் 9.20 மணியளவில் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் எல்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சீரற்ற காலநிலையால் 22 ஆயிரம் 338 பாதிப்பு!

## 192 குடும்பங்கள் இடம்பெயர்வு!!

கொழும்பு, ஜூன். 03

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடை மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் ஒருவர் பலியாகியுள்ளார். ஒருவர் காயமடைந்துள்ளார். 174 வீடுகள் சேதமடைந்துள்ளன.

அடை மழை ,வெள்ளம் மற்றும் மண்சரிவால் 6 மாவட்டங்களில் 5, 357 குடும்பங்களைச் சேர்ந்த 22, 338 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

192 குடும்பங்களைச் சேர்ந்த 690பேர் இடம்பெயர்ந்துள்ளனர். (அ)

# ஏ-9 வீதியில் கோர விபத்து தாயும் மகளும் உயிரிழப்பு!

## தந்தையும் மகனும் படுகாயம்!!

கொழும்பு, ஜூன். 03

ஏ-9 பிரதான வீதியின் கவரக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

பலத்த காயமடைந்த தந்தை மற்றும் 11 வயதான மகன் ஆகியோர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த இவர்கள், பயணித்த ஓட்டோ நேற்று அதிகாலை 5.29 மணியளவில் கவரக்குளம் பிரதேசத்திலுள்ள ஓடையொன்றுக்குள் குடைசாய்ந்துள்ளது.

ஓட்டோ சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்கான காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ)

# 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தது நான் செய்த பாவம்

## கூறுகின்றார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜூன். 03

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிப்பதாகவும், தேவையான திருத்தங்களைச் செய்வதாகவும் அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் நான் செய்த ஒரே பாவம் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தது தான் எனவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாட்டில் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# சீனாவிலிருந்து முதல் தொகுதி மருந்து இன்று இலங்கை வரும்

கொழும்பு, ஜூன். 03

சீனாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட அத்தியாவசிய மருந்துகளின் ஒரு தொகுதி இன்று வெள்ளிக்கிழமை இலங்கைக்கு கொண்டுவரப்படும் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 500 மில்லியன் சீன யுவான் நிதியுதவியின் கீழ் சீனாவில் இருந்து முதல் தொகுதி மருந்துகள் இன்று நாட்டுக்கு வரவுள்ளது.

அவற்றில் 256,320 உயிர் காக்கும் கருவிகள் மற்றும் 10 மில்லியன் சீன யுவான் பெறுமதியான ஊசிகளும் உள்ளன.

இரண்டாவது தொகுதி இந்த மாத நடுப்பகுதியில் நாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரண்டு சரக்குகளும் இலங்கையில் ஆறு மாத கால பயன்பாட்டுக்கு போதுமானதாக இருக்கும் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# வைத்தியசாலை களஞ்சியத்தில் தீ!

கொழும்பு, ஜூன்.

வெல்லவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிரிபிட்டிய பிராந்திய வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் தீ பரவியுள்ளது.

நேற்று முன் தினம் மாலை இந்த தீ விபத்து ஏற்பட்டதாகவும், தற்போது தீ விபத்து குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கட்டடத்தை சோதனையிட்டதில், மருந்து சேமித்து வைக்கப்பட்டிருந்த அலுமாரிக்கு அருகே பிரதான மின் ஆளி தீப்பிடித்தது தெரிய வந்தது என்று பொலிஸார் கூறினர்.

இந்த மருந்துக் களஞ்சியத்தில் இருந்த மருந்துகளில் ஒரு சிறிய பகுதி தீயில் எரிந்து நாசமானது. (அ)

# கடனுதவிகளை பயன்படுத்தி முதலில் மருந்துப் பற்றாக்குறையை தீருங்கள்!

## கோப் குழு அரசுக்கு பரிந்துரை

**கொழும்பு, ஜூன் 03**

**இந்தியக் கடனுதவி மற்றும் ஏனைய கடனுதவிகளைப் பயன் படுத்தி நாட்டிலுள்ள மருந்துப் பற்றாக்குறையை விரைவில் தீர்ப்ப தற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் பாராளு மன்ற உறுப்பினர் சரித ஹேரத் பரிந்துரைத்துள்ளார்.**

2022ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி வரையில் அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறை குறித்தும், அதனை நீக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் ஆராய்வதற்கு இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தபோதே அவர் இந்தப் பரிந்துரையை வழங்கினார்.

இந்தியக் கடனுதவியில் 200 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கப்பெற்றிருந்தாலும் 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி வரையில் 55.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உபகரண வழங்கல்களுக்கு மாத்திரமே அமைச்சின் மருத்துவ உப குழு வினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததாக கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். அது நிதியுதவியின் 28 வீதம் எனவும், 2022 மே 18 ஆம் திகதி வரை 92.2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான விலைப் பட்டியல் மாத்திரம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை குழுவின் தலைவரால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் பற்றாக்குறையாக இருக்கும் சூழ்நிலையில் இந்த நிதியைப் பயன்படுத்தி தேவையான மருந்துகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டினர்.

விஷேடமாக அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் பற்றாக்குறை பொதுமக்களின் வாழ்க்கையுடன் தொடர்புபட்ட பிரச்னை என்பதால் தற்போதைய நெருக்கடி நிலைமையை விரைவில் தீர்த்து அத்தியாவசிய மருந்துகளைப் பொதுமக்களுக்கு வழங்கும் அவசியத்தை குழுவின் தலைவர் வலியுறுத்தினார். அதற்கமைய, அந்த நிதியைப் பயன்படுத்தி தேவையான மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்குப் பரிந்துரை வழங்கினார்.

இது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தற்போது அது இறுதிக்கட்டத்தில் இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். அதற்கமைய அத்தியாவசிய மருந்துகளை இந்த நிதியினூடாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர். விசேடமாக அமைச்சர்கள் சிலர் இந்தக் காலப்பகுதியில் நியமிக்கப்பட்டமையாலும் இந்தப் பணிகள் தாமதமடைந்ததாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்திய கடனுதவிக்கு மேலதிகமாக, மருந்துப் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்குக் கிடைத்துள்ள உலக வங்கிக் கடன், உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி மற்றும் ஏனைய நன்கொடை யாளர்களிடமிருந்து கிடைத்துள்ள உதவிகளை விரைவாகப் பயன்படுத்தாமை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. விசேடமாக இந்தியக் கடனுதவி உள்ளிட்ட இந்த அனைத்து உதவிகளும் 330 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகம் எனவும் அவை இதுவரை செலவு செய்யப்படவில்லை என்பது இங்கு புலப்பட்டது. விரைவில் நிர்வாகத் தீர்மானங்கள் மற்றும் அனுமதியைப் பெற்று இந்த நிதியைப் பயன்படுத்தி மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்தால் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை மருந்துப் பற்றாக்குறை ஏற்படாது என வருகை தந்திருந்த உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். (அ)




# முகாமைத்துவ கற்கை, வணிக பீட புதுமுக மாணவர் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 03

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் 2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி புதன் கிழமை இடம்பெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுமார் 520 மாணவர்கள் நிகழ் நிலையில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறி சற்குணராஜா புதுமுக மாணவர்களை வரவேற்று, வாழ்த்துரை வழங்கினார். முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் கணக்கியல், மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், வணிகம், நிதி முகாமைத்துவம் மற்றும் சுற்றுலாவும் விருந்தோம்பலும் அலகு ஆகியவற்றின் தலைவர்கள் தத்தமது துறைகளின் கற்கைநெறிகள் பற்றி மாவர்களுக்கு விளக்கமளித்ததுடன், பல்கலைக்கழகத்தின் நூலகர், நலச்சேவைகள் பணிப்பாளர், உதவிப் பதிவாளர், மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு பல்கலைக் கழக நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளித்தனர். (அ)

# இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட பூச்சிகொல்லி மருந்து சிக்கியது!

யாழ்ப்பாணம், ஜூன் 03

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சுமார் 35 போத்தல் பூச்சிகொல்லி மருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை கடற்படையினரால் மீட்கப்பட்டது

நெடுந்தீவு கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்று மிதந்து வருவதை அவதானித்த கடற்படையினர் சோதனையிட்டபோது அதில் பூச்சிக்கொல்லி மருந்துகள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

கடத்தல்காரர்கள் இந்தியாவிலிருந்து குழைத்த பூச்சிக் கொல்லி மருந்துகளை கடத்திய நிலையில் கடற்படையினரைக் கண்டதும் மருந்துப் பொதியை கடலில் வீசிவிட்டு



தப்பி இருக்கலாம் என்ற கோணத்தில் கடற்படையினர் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கோப் குழுவில் முன்னிலையாகுமாறு இலங்கை மின்சார சபைக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 03

எதிர்வரும் 9ஆம் திகதி கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றியக் குழுவில் முன்னிலையாகுமாறு இலங்கை மின்சார சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களுக்கான இலங்கை மின்சார சபையின் கணக்காய்வு அறிக்கை மற்றும் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்யப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு மேலதிகமாக எதிர்வரும் 7 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையையும், எதிர்வரும் 8ஆம் திகதி மொரட்டுவ பல்கலைக்கழகத்தையும் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் தற்போதைய உணவு நெருக்கடி தொடர்பிலான விஷேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 10ஆம் திகதி கோபா எனப்படும் அரச பொது கணக்குகள் பற்றியக்குழுவில் அதன் தலைவர் திஸ்ஸ வித்தாரனவின் தலைமையில் இடம்பெறவுள்ளது. (அ)

# மேல் மாடியிலிருந்து கீழே வீழ்ந்து இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 03

வெவ்வேறு இடங்களில் மேல் மாடியிலிருந்து கீழே வீழ்ந்து இருவர் உயிரிழந்துள்ளனர்.

களுத்துறை - நாகொட வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவின் இரண்டாம் மாடியிலிருந்து கீழே வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை பதிவாகியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பயாகல பகுதியைச் சேர்ந்த 35 வயதானவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனிடையே, அம்பாறை பிரதேசத்திலும் வீடொன்றின் மேல் மாடியிலிருந்து கீழே வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்து!

## வரணியில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 03

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகே இருந்த வேலிக்கு பாய்ந்ததால் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

அதிவேகமாக செலுத்தப் பட்ட மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த வேலிக்குள் பாய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் வரணிப் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் படுகாயமடைந்த நிலையில் பருத் தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நிறைவேற்றதிகாரத்தை நீக்க சு.க. இரண்டு நிபந்தனைகள்!

## தயாசிறி ஜயசேகர அறிவிப்பு

**கொழும்பு, ஜூன் 03**

**மாகாண சபைகள் சுயாட்சி கோருவதை கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்த பின்னரே , நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

*கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.*

*அத்துடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உடன் நீக்கப்பட வேண்டும் என அடம் பிடித்தால், அது 21 ஐயும் தாமதப்படுத்திவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியவை வருமாறு:*

*அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டமூலம் ஊடாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரம் செல்வதை சிலர் விரும்பவில்லை. இங்கு நபர்கள் முக்கியம் அல்லர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்தி, பாராளுமன்றத்தை பலப்படுத்துவதே இதன் நோக்கம். அந்த அடிப்படையில்தான் 21 ஐ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரிக்கின்றது.*

*இதற்கிடையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர். அதனை செய்வதாக இருந்தால், சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டிவரும். இந்த முயற்சி 21 ஐயும் தாமதப்படுத்தும். எனவே, முதற்கட்டமாக 21 ஐ நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.*

*நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை 1978 இல் அமுலுக்கு வந்தது. அப்போது சுதந்திரக்கட்சி அதனை எதிர்த்தது. எனினும், 88 காலப்பகுதியில் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டன. எனினும், ஆளுநர்கள் ஊடாக ஜனாதிபதி மாகாணங்களைக் கட்டுப்படுத்தி, ஒற்றையாட்சியை பாதுகாத்தார்.*



*எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டால் இந்த ஆளுநரின் அதிகாரத்தை எவ்வாறு அமுல்படுத்துவது, ஒற்றையாட்சியை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.*

*அடுத்ததாக விகிதாசார தேர்தல் முறைமையின்கீழ் 89, 2010 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிலேயே கட்சிகளுக்கு ஆட்சி அமைப்பதற்கான அறுதிப்பெரும்பான்மை கிடைத்துள்ளது. ஏனைய சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியின் தலையீட்டுடன் எதிரணிகளின் ஒத்துழைப்பை பெற்றே, ஆட்சி நிறுவப்பட்டுள்ளது. எனவே, ஸ்தீரமான அரசு தொடர்பிலும் தீர்மானிக்கப்பட வேண்டும்.*

*இவ்விரண்டு ஏற்பாடுகளை செய்த பின்னரே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் தீர்மானிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)*



# பொலிஸாரைத் திட்டித் தீர்த்த எம்.பியின் மகனும் மருமகளும்

*கொழும்பு, ஜூன் 03*

*தெற்கு அதிவேக வீதியில் கடமையாற்றும் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் திலீப் வெதராச்சியின் மகன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர் என தெரிய வருகிறது.*

*இந்தக் காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில் வீரகெட்டிய-பெதிகம இடையேயான சந்திப் பில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.*

*அதிவேக நெடுஞ்சாலையில் அவர்கள் பயணித்த வண்டியின் பின்பகுதியில் ஏற்றப்பட்டிருந்த குளிர்சாதனப் பெட்டி பாதுகாப்பற்றதாக இருந்தமையால் நுழைய அனுமதிக்க முடியாது என பொலிஸார் கூறிய தையடுத்து இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (அ)*

# ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ செயலணியின் பதவிக்காலம் மூன்று வாரங்கள் நீடிப்பு

*கொழும்பு, ஜூன் 03*

*ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் மேலும் 3 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியினூடாக செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.*

*ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் கடந்த 27ஆம் திகதி நிறைவடைந்தது.*

*அதற்கமைய, செயலணியின் பதவிக்காலத்தை மேலும் 3 வாரங்களுக்கு நீடித்து அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (அ)*

# காலிமுகத்திடல் வன்முறைகள்: மஹிந்த கஹந்தகமகே கைது!

*கொழும்பு, ஜூன் 03*

*மே 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு முன்னால் ஜனநாயக வழிப் போராட்டக்காரர்களை இலக்குவைத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் மேற்கொண்ட வன்முறைகள் தொடர்பில் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகமகே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*குறித்த சம்பவத்தின் சந்தேகநபராக இவரது பெயரும் உள்ளடக் கப்பட்டுள்ளமையால், உடனடியாகக் கைது செய்யுமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தது.*

*அதற்கமைய, குறித்த சந்தேகநபர் நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டார். (அ)*

# ஹரினின் பதவி பறிக்கப்பட்டது புதிய அமைப்பாளர் நியமனம்

*கொழும்பு, ஜூன் 03*

*ஐக்கிய மக்கள் சக்தியின் வத்தளை தொகுதியின் புதிய அமைப்பாளராக, முன்னாள் பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார் .*

*வத்தளை தொகுதி அமைப்பாளராக செயற்பட்ட ஹரின் பெர்ணான்டோ, அரசுக்கு ஆதரவளித்து அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்டுள்ளார்.*

*இதனால் தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார். இந்நிலையிலேயே புதிய அமைப்பாளராக நியோமல் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். (அ)*

# பொருளாதாரம் குறித்து பிரதமர் விசேட உரை

*கொழும்பு, ஜூன் 03*

*பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் விசேட உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*நேற்று நடைபெற்ற பாராளுமன்ற விவகாரக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இதனை தெரிவித்தார்.*

*அடுத்த வாரம் செவ்வாய் முதல் வெள்ளி வரை பாராளுமன்றம் நடைபெறும் என்றும், நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து மூன்று நாள் விவாதம் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)*

# விமான நிலையங்களை மூடுவதற்கு எதிர்பார்ப்பு

*கொழும்பு, ஜூன் 03*

*நாட்டில் நிலவும் நிதிநெருக்கடியை கவனத்திற்கொண்டு மத்தள சர்வதேச விமான நிலையம் மற்றும் இரத்மலானை விமான நிலையத்தை மூடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக விமான சேவைகள் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.*

*அது தொடர்பில் கருத்து தெரிவித்த விமான சேவைகள் அமைச்சின் உயரதிகாரி-*

*பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக மேற்படி விமான நிலையங்களின் பராமரிப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது.*

*அதேவேளை, குறிப்பிட்டளவு விமானங்கள் இந்த விமான நிலையங்களுக்கு வருகை தராமையால் அந்த விமான நிலையங்களைத் தொடர்ந்தும் நடத்திச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் தற்போது பெரும் சிக்கல்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது.*

*குறிப்பாக மேற்படி இரண்டு விமான நிலையங்களினதும் ஊழியர்கள் மற்றும் ஆளணியினரைக் கொண்டு நடத்துவது மற்றும் ஏனைய செலவுகளை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.*

*மத்தள விமான நிலையத்தின் சேவைகளுக்காக ஊழியர்களை அழைத்துச் செல்வதற்கு சொகுசு பஸ் வண்டியொன்று கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தினமும் மத்தள விமான நிலையத்துக்கு போக்குவரத்தை மேற்கொள்வதானது பெரும் செலவுகளை ஏற்படுத்தியுள்ளது. அதேபோன்ற ரத்மலானை விமான நிலையமும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இயங்குகின்றது.*

*இரத்மலானை விமான நிலையம் அண்மையில் சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தப்பட்டது. எனினும் அன்றைய தினம் வெள்ளோட்டமாக மாலைதீவின் மக்கள் விமானம் ஒன்று வருகை தந்தது. எனினும் அவ்விமானம் மீண்டும் பயணிகளின்றி வெற்று விமானமாகவே சென்றுள்ளது. அன்றைய தின நிகழ்வுக்காக 80 இலட்சம் ரூபா செலவு ஏற்பட்டுள்ளது-என் றார். (அ)*

# 21 ஐ இறுதிப்படுத்துவதற்கு இன்று சர்வகட்சித் தலைவர்கள் கூட்டம்!

*கொழும்பு, ஜூன் 03*

*அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டமூலம் எதிர்வரும் 6 ஆம் திகதி அமைச்சரவையில் முன்வைக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். 21 ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பில் இன்று சர்வகட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. இச்சந்திப்பையடுத்து 21 ஆவது திருத்தச்சட்டமூலம் இறுதிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகன்றது. அதன்பின்னர் திங்களன்று அமைச்சரவையில் முன்வைக்கப்படும். (அ)*

# அம்பேத்கர் பூமியில் அவரது பெயர் தொடர்பாக நடந்த பயங்கர சாதி கலவரம்:

**மயூரேஷ் கொன்னூர்**




இந்தியாவின் ஆந்திர மாநிலம் அமலாபுரம் நகரில் கடந்த வாரம் பயங்கர கலவரம் நடந்தது. அமைச்சர் ஒருவரின் வீடு எரிக்கப்பட்டது. ஐந்து பேருந்துகளுக்கு தீ வைக்கப்பட்டது. பல வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன, கல் வீச்சும் நடந்தது.

வன்முறை போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த, பொலிஸார் பலப்பிரயோகம் செய்ய வேண்டியிருந்தது. கூடவே அப்பகுதியில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் பெயரை தங்கள் மாவட்டத்திற்குச் சூட்டுவதை போராட்டக்காரர்கள் விரும்பாததே, இந்தக் கலவரங்களுக் காரணம். டாக்டர் அம்பேத்கர், இந்தியாவில் ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு நீதி கிடைக்க ஒரு நீண்ட போராட்டத்தை நடத்தினார். இதன் விளைவாக பிற்படுத்தப்பட்ட சாதி மக்களுக்கு சமத்துவம் என்ற அரசியலமைப்பு உரிமை கிடைத்தது.

வை.எஸ்.ஆர். ஜெகன்மோகன் ரெட்டியின் அரசு, கோனாசீமா மாவட்டத்திற்கு பி.ஆர்.அம்பேத்கரின் பெயரை சூட்ட முடிவு செய்தது. அரசின் இந்த முடிவுக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த வன்முறை சம்பவங்கள் அண்டை மாநிலமான மகாராஷ்டிராவில் 44 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பெயர் மாற்ற சர்ச்சையை நினைவூட்டியுள்ளது. இதன போது, மகாராஷ்டிராவின் மராத்வாடா பகுதியில் கடும் கலவரம் ஏற்பட்டது. அப்போதும் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் பெயர் சர்ச்சையின் மையத்தில் இருந்தது. அப்போது மகாராஷ்டிர அரசு பல்கலைக் கழகத்தின் பெயரை மாற்ற முயற்சித்தது.

மராத்வாடா பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் பெயரை சூட்ட முடிவு செய்த பிறகு நடந்த கலவரங்கள் மகாராஷ்டிராவின் சமூக வரலாற்றில் ஒரு ஆறாத வடுவாக உள்ளது. பி.ஆர். அம்பேத்கர் இந்தப் பல்கலைக்கழகத்தில் படித்து, பட்டம் பெற்றார். அரசியல் வாழ்க்கையை மேற்கொண்டார், சமூக இயக்கங்களைத் தொடங்கினார். இதுவே அவரது கடைசி உறைவிடமாக மாறியது.

1978இல் எடுக்கப்பட்ட இந்த முடிவை நடைமுறைப்படுத்த மேலும் 16 ஆண்டுகள் ஆனது. இறுதியாக 1994 இல் அது அமுலானது. பல்கலைக்கழகத்தின் முழுப் பெயரையும் மாற்ற முடியவில்லை. ஆனால் அதில் பி.ஆர்.அம்பேத்கரின் பெயர் சேர்க்கப்பட்டு இப்போது "டாக்டர். பாபாசாகேப் அம்பேத்கர் மராத்வாடா பல்கலைக்கழகம் என்று அழைக்கப்படுகிறது.

இறுதியில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் இந்தப் பெயரை ஏற்றுக் கொண் டனர். ஆனால் அதற்குப் பின்னால் வன்முறையின் கதையும் பதிவானது. 1978இல், மராத்வாடாவின் உயர்சாதி மக்கள் தலித்துகளைத் தாக்கினர். அதில் பலர் கொல்லப்பட்டனர். பலர் வீடுகளை இழந்தனர். நூற்றுக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பை இழந்தனர்.

**1978, ஜூலை 27ஆம் திகதி நடந்தது என்ன?**

மராத்வாடா பல்கலைக்கழகத்தின் பெயரை டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் பல்கலைக்கழகம் என்று மாற்ற மாநில சட்டப்பேரவை ஒருமனதாக முடிவு செய்தபோது இவை அனைத்தும் நடந்தன. 1978 ஜூலை 27ஆம் திகதி எடுக்கப்பட்ட இந்த முடிவுக்குப் பிறகு மாநிலத்தில் கலவரம் வெடித்தது. மாலையில் பெயர் மாற்றம் பற்றிய செய்தி மக்களை எட்டியவுடன், மராத்வாடாவின் பல பகுதிகளில் வன்முறை தொடங்கியது. நான்டெட் மற்றும் பர்பானி கிராமப் பகுதிகள் மிக அதிகமாக பாதிக்கப்பட்டன.

பெயர் மாற்றத்திற்குப் பிறகு இந்த கலவரங்கள் தொடங்கினாலும், அவற்றின் ஆழத்தில் சாதி வேற்றுமை இருந்தது. அந்தப் பகுதியில் உயர் சாதியினர் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதிகள் என்று அழைக்கப்படுபவர்கள் நேருக்கு நேர் மோதினர். கலவரம் சுமார் இரண்டு மாதங்கள் நீடித்தது. இதில் பெருத்தசேதம் ஏற்பட்டது. ஆனால், சிறு சிறு சம்பவங்கள் அடுத்த ஒன்றரை வருடங்கள் தொடர்ந்ததால், அது ஏற்படுத்திய காயங்கள் ஆறுவதற்கு மேலும் பல வருடங்கள் ஆனது.

## 44 ஆண்டுக்கு முந்தைய சமூக-அரசியல் வரலாறு




அந்த காலகட்டத்தை நினைவுகூர்ந்த மூத்த பத்திரிக்கையாளர் நிஷிகாந்த் பலேராவ், "சட்டப்பேரவையில் மாலை 4 மணியளவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரவு 7 மணிக்கு மண்டல செய்தியறிக்கை மூலம் இது மக்களுக்கு தெரிய வந்தது. உடனே ஆர்ப்பாட்டம் தொடங்கியது. ஔரங்காபாத்தில் பெயர் மாற்ற எதிர்ப்புப் போராட்டம் நடத்திய மாணவர்கள்," டெய்லி மராத்வாடா" செய்தித்தாள் அலுவலகத்திற்கு வெளியே ஆர்பாட்டம் நடத்தினர்," என்று தெரிவித்தார்.

நிஷிகாந்த் பலேராவ் அப்போது அரசியல் சம்பவங்கள் மற்றும் சாதிய ஒடுக்குமுறை குறித்து செய்திகள் எழுதிவந்த ஓர் இளம் பத்திரிகையாளர். இவர் டெய்லி மராத்வாடாவின் ஆசிரியரான அனந்தராவ் பலேராவின் மகன் ஆவார். இந்தப் பத்திரிக்கை அந்தப் பகுதியில் மிகவும் பிரபலமான ஒன்றாகும். நிஷிகாந்தின் தந்தை, பெயர் மாற்றத்தை எதிர்த்தார். ஆனாலும் அரசின் இந்த முடிவுக்கு எதிராக அவர் எதையும் சொல்லவில்லை.

"மராத்வாடா விடுதலைப் போர்" இந்தப் பிராந்தியத்தின் அடை யாளத்தை ஆழப்படுத்தியது. இந்த அடையாளம் பல்கலைக்கழகத்தின் பெயரில் பிரதிபலித்தது. ஆனால் சாதி மற்றும் சமூகப் பிளவுகளின் வலுவான அடித்தளம், இந்த எதிர்ப்பை வன்முறை யாக மாற்றியது.

மராத்வாடா பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வந்தது. அம்பேத்கருக்கு, மராத்வாடா மற்றும் ஔரங்காபாத்துடன் சிறப்பான உறவு இருந்தது. சமூக மாற்றத்தைக் கொண்டு வர, அம்பேத்கர் முதலில் 1950 இல் மும்பையில் உள்ள சித்தார்த் கல்லூரியில்," மக்கள் கல்விச் சங்கத்தின்" அடித்தளத்தை அமைத்தார். பின்னர் 1952இல் அவர் ஔரங்காபாத்தில் மிலிந்த் கல்லூரியை நிறுவினார். மராத்வாடா மற்றும் அருகிலுள்ள விதர்பா பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தலித் மாணவர்கள் மிலிந்த் கல்லூரியில் சேர்க்கை பெற்றனர்.

அந்தக் காலகட்டத்தில் ஔரங்காபாத் மற்றும் மராத்வாடா, தலித் மாணவர்களின் இயக்கத்தின் பூமியாக மாறியது. மராத்வாடாவின் சமூக, அரசியல் மற்றும் கல்வி உலகில் அம்பேத்கர் இயக்கம் ஒரு வலுவான சக்தியாக மாறியது. மாநிலத்தின் பிற பகுதிகளிலும் ஏறக்குறைய இதே நிலைதான் இருந்தது. மராத்வாடா பல்கலைக்கழகத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை இந்தப் பிரிவு மக்களிடம் இருந்து எழத் தொடங்கியது.

சரத் பவார் காங்கிரஸில் இருந்து பிரிந்து 1978இல் முற்போக்கு ஜனநாயக முன்னணி அரசை அமைக்கும் வரை இந்தக் கோரிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முற்போக்கு ஜனநாயக முன்னணி அரசு இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்ற முடிவு செய்து



ஜூலை 27 அன்று இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

அரசின் இந்த முடிவு வெளியான சில மணி நேரங்களிலேயே மராத்வாடா பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டது. இப்பகுதி முழுவதும் சாதிக் கலவரங்கள் வெடித்து தலித் குடும்பங்கள் குறிவைக்கப்பட்டன. இதைப் பற்றி சரத் பவார் மராத்தியில் எழுதிய "லோக் மாஜே சங்கீத்" என்ற தனது வாழ்க்கை வரலாற்றில் விரிவாக எழுதியுள்ளார்.

பல நாட்கள் வன்முறை தொடர்ந்தது. போலீசார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் வன்முறையாளர்களை கலைக்க முயன்றனர். தலித்துகள் மீதான வன்கொடுமைகள் மற்றும் அவர்களின் இழப்புகள் பற்றிய ஆவண ஆதாரங்கள் உள்ளன. பல குழுக்கள் அமைக்கப்பட்டு உண்மை கண்டறியும் குழுக்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டன. அங்குள்ள நிலைமை குறித்து அறிக்கை அளிக்க மத்திய அரசும் ஒரு குழுவை அனுப்பியது.

மாணவர்கள், ஆசிரியர் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் அமைப்பான "அத்யாசார் விரோதி மஞ்ச்" (வன்கொடுமைகள் எதிர்ப்பு ) என்ற அமைப்பும் இதே போன்ற அறிக்கையை தயாரித்துள்ளது. இந்த அறிக்கை எகனாமிக் அண்ட் பொலிட்டிகல் வீக்லியின் 1979 மே மாத இதழில் வெளி யிடப்பட்டது. மராட்டா பகுதியில் சுற்றுப் பயணத்திற்குப் பிறகு தயாரிக்கப் பட்ட இந்த அறிக்கை, அந்தப் பகுதியின் அடிப்படை உண்மை நிலையை தெளிவாகச் சொல்கிறது.

**வன்முறைக்குக் காரணம் என்ன?**

அம்பேத்கர் என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டதால் இந்த வன்முறை ஏற்படவில்லை, தலித் சமூ கத்தின் தன்னம்பிக்கையை அது அதிகரித்ததுதான் வன்முறைக்குக் காரணம் என்று அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்தவர்களும், இயக்கங்களில் பங்கேற்றவர்களும், இந்த இருண்ட அத்தியாயத்தைப் படித்தவர்களும் நம்புகிறார்கள்.

அந்த நேரத்தில் மராத்வாடாவின் மக்கள் தொகை சுமார் எண்பது லட்சம். அதில் 16.25 சதவிகிதம் பேர் பட்டியலின சாதியினர்.

ஆதிக்க சாதியினருக்கும் தலித் மக்க ளுக்கும் இடையிலான பதற்றம் தெளிவா கத் தெரிந்தது. குறிப்பாக மராத்வாடாவில் இரு தரப்பு மாணவர்களும் கொந்தளித்தனர். அப்பகுதியில் இயல்பு நிலை ஏற்படும் வகையில் பெயர் மாற்றம் செய்யும் முடிவை அரசு நிறுத்த வேண்டியதாயிற்று.

சரத் பவார் தனது வாழ்க்கை வரலாற்றில், "பெயர்மாற்ற முடிவை எதிர்த்து கோபமடைந்த இளைஞர்கள் முன்னிலையில் மாவட்ட மற்றும் மண்டல அளவிலான அனைத்து தலைவர்களும் சரணடைந்தனர். ஒவ்வொரு தலித் குடும்பத்திற்கும் பாதுகாப்பு வழங்குவது நடைமுறையில் சாத்தியமற்றதாக மாறிவந்தது. பல்கலைக்கழகத்தின் பெயரை மாற்றுவதால் மக்களின் உயிர் போவதை நாங்கள் விரும்பவில்லை. இளைஞர்களை சமாதானப்படுத்தவும் அவர்களின் கோபத்தை தணிக்கவும் நாங்கள் தவறிவிட்டோம். இறுதியாக பெயரை மாற்றும் முடிவை நாங்கள் திரும்பப் பெற வேண்டியதாயிற்று," என்று எழுதியுள்ளார்.

நாமாந்தர் இயக்கமும், அதைத் தொடர்ந்த சாதி வன்முறையும், மராத்வாடாவின் அரசியல் தன்மையை மாற்றியது. இந்தக் காலகட்டத்தில் உருவான விரிசல் பல தசாப்தங்களுக்குப் பிறகும் காணப்பட்டது. ஆனால் இதனால் ஏற்பட்ட ஒரு முக்கிய விளைவு, சிவசேனை இந்தப் பிராந்தியத்திற்கு வந்து அரசியல் ரீதியாக வலுப்பெற்றதுதான். இப்போது மராத் வாடா சிவசேனையின் கோட்டை என்று அழைக்கப்படும் அளவுக்கு இங்கு சிவ சேனை வலுப்பெற்றது.

சிவசேனையும் அதன் தலைவர் பாலாசா ஹேப் தாக்கரேவும் பெயர் மாற்றத்தை வெளிப்படையாக எதிர்த்தனர். இது அவரை மராத்வாடாவின் தலித் அல்லாத மக்களிடையே பிரபலமாக்கியது.

இறுதியாக, 1994-ம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் பெயர் மாற்றப்பட்டபோது, பாலாசாஹேப் தாக்கரே, "உங்கள் வீட்டில் சாப்பிட உணவு இல்லாத போது, உங்களுக்கு பல்கலைக்கழகத்தின் தேவை என்ன" என்று நான்டெட்டில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

# சர்வாதிகாரத்தை விட வங்குரோத்து நிலை பயங்கரமானது

விக்டர் ஐவன்

அத்தியாவசியச் சீர்திருத்தங்கள் அலட்சியப்படுத்தப்பட்டதன் காரணமாக இலங்கை அரசு மற்றும் சமூக-அரசியல் அமைப்புக்குள் உருவான சிதைவின் உள்ளே அவை அனைத்தும் வீழ்ச்சியடைந்து, அதன் வழியாக நாட்டின் வீழ்ச்சிக்கும், அதைத் தொடர்ந்து இலங்கையின் திவால்நிலைக்கும் வழிவகுக்கும் என்ற கருத்து எனக்குள் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் ஏற்பட்டது. அப்போதைய நிலையில் , இலங்கை அரசு இரண்டு பெரிய உள்நாட்டு கிளர்ச்சிகளை எதிர்கொண்டு அவற்றை சிரமப்பட்டு தோற்கடித்திருந்தாலும், குறித்த கிளர்ச்சிகள் காரணமாக அரசுக்கும், சமூக-அரசியல் அமைப்புக்கும் கடுமையான சேதம் ஏற்பட்டிருந்தது.

மேற்சொன்ன இரண்டு கிளர்ச்சிகளும் அவை ஆரம்பிக்கப்பட்டவுடன் தோற்கடிக்கப்படவில்லை. மாறாக அவை வெகுதூரம் பரவி, கிளர்ச்சியாளர்கள் வெற்றி யின் விளிம்பில் இருந்த நிலையிலேயே அவை தோற்கடிக்கப்பட்டன. ஜே.வி.பி.யின் இரண்டாவது சிங்களக் கிளர்ச்சியை 24 மாதங்கள் வரை கிளர்ச்சியாளர்களால் தாக்குப் பிடித்துக் கொள்ள முடிந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளாலும் 24 வருடங்கள் வரையான நீண்ட காலம் வரை தமது தமிழ்க் கிளர்ச்சியைத் தாக்குப் பிடித்து முன்கொண்டு செல்ல முடிந்தது.

இந்த இரண்டு அச்சுறுத்தலான கிளர்ச் சிகளையும் மிகவும் தாமதித்தேனும் பாதுகாப்புப் படையினரால் முறியடிக்க முடிந்த போதிலும், குறித்த கிளர்ச்சிகள் மூலம் பாதுகாப்புப் படையினருக்கும், அரசிற்கும், சிங்கள, தமிழ் சமூகத்திற்கும், நாட்டின் சமூக அரசியல் அமைப்புக்கும் பெரும் சேதம் ஏற்பட்டிருந்தது.

மேற்குறித்த கிளர்ச்சிகள் காரணமாக அழிந்து போன மனித உயிர்களின் எண்ணிக்கை 150,000 க்கும் அதிகமானதாக இருக்கலாம். சித்திரவதை மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை, இறப்பு எண்ணிக்கையை விட மூன்று முதல் நான்கு மடங்கு அதிகமாக இருக்கலாம். இந்த கிளர்ச்சிகளின் போது, கிளர்ச்சியாளர்களைப் போலவே, பாதுகாப்புப் படையினரும் போட்டி போட்டுக் கொண்டு சமூகத்தின் மீது அதிகபட்ச குரூரத்தனத்தை கட்டவிழ்த்துவிட்டிருந்ததுடன் அந்த நிலை ஒட்டுமொத்த சமூகத்தின் மனோநிலையை கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ சிதைத்து நோய் வாய்ப்படுத் திய ஒரு சூழ்நிலை உருவாகக் காரணமாக அமைந்தது. அவ்வாறான விசேட சூழலில், நாடு ஒரு பெரிய சீர்திருத்தத் திட்டத்தை நோக்கி முன்னகர்த்தப்பட வேண்டிய அத்தியாவசிய நிலையில் இருந்தது.

## தேவையான மறுசீரமைப்புகளை புறக்கணித்தல்

மேற்குறித்த கிளர்ச்சிகள் காரணமாகவும் சட்டத்தை மேவி நிற்கும் ஜனாதிபதியைத் தலைவராகக் கொண்ட அரசியலமைப்பு காரணமாகவும், தேசத்திற்கும் சமூக-அரசியல் அமைப்புக்கும் நிகழ்ந்திருந்த கடுமையான சேதங்களை சீர்படுத்த ஒரு மறுசீரமைப்புத் திட்டத்தை தொடங்குவது நாட்டுக்கு ஒரு சிறந்த முன்னோக்கிய நகர்வுக்கு தவிர்க்க முடியாத நிபந்தனையாக இருந்த போதிலும், பிரபாகரனைத் தோற்கடித்ததன் மூலம் உருவான கொண்டாட்ட மனோநிலை அந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்வதில் நாட்டின் திறனை இல்லாதொழித்து விட்டிருந்தன.

யுத்த வெற்றியின் இரண்டாம் ஆண்டு நிறைவை அண்மித்த காலப்பகுதியில், சீர்திருத்த வேலைத்திட்டமொன்றை நோக்கி நாட்டை வழிநடத்துவதன் முக்கியத்துவத்தை அரச தலைவர் (ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ) அவர்களுக்கு உணர்த்த நான் முயன்றேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க அது தொடர்பில் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பமொன்று வழங்கப்பட்டது. அதில் ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் கலந்து கொண்டனர். அது தொடர்பான கலந்துரையாடல் சுமார் மூன்று மணி நேரம் நீடித்த போதிலும், ஆனால் ஜனாதிபதி எனது மறுசீரமைப்புத் தொடர்பான யோசனையை தெளிவாகப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்.

அதன் பின்னர், ராவயவின் 25வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, ஜனாதிபதி உள்ளிட்ட பிரதான கட்சிகளின் தலைவர்களை அந்நிகழ்வில் கலந்து கொள்ள வைத்து, சீர்திருத்த வேலைத்திட்டத்திற்கு நாட்டை வழிநடத்த வேண்டிய தன் அவசியத்தின் தீவிரத்தை அவர்களுக்கு வலியுறுத்திய போதிலும், அந்த வேண்டுகோள் வெற்றிகரமான உரையாடலாக மாற்றம் பெறவில்லை. அதன் பின்னர் எனது அவதானிப்பை சமூகமயமாக்க வேண்டிய தன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு “இலங்கையை மீட்டெடுத்தல்” மற்றும் “தேசத்தின் சோகம்” என்ற இரண்டு புத்தகங்களை எழுத வேண்டியிருந்தது. குறித்த அவதானிப்பின் ஊடாக வலியுறுத்தப்பட்ட விடயம் யாதெனில் “தேவையான சீர்திருத்தங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டால், தேசம் மற்றும் சமூக-அரசியல் அமைப்பு சிதிலமடைதல் வளர்ச்சியடைந்து, சமூக - அரசியல் அமைப்பு மற்றும் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, நாட்டை திவால் மற்றும் வங்குரோத்து நிலைக்குள் தள்ளும்” என்பதாகும். அதன் பின்னர், அந்த அவதானிப்பை சமூகமயப்படுத்த நான் நூற்றுக்கணக்கான கட்டுரைகளை எழுத வேண்டியிருந்தது.

## மங்கள சமரவீர

கடந்த ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு மங்கள சமரவீரவின் வாழ்க்கை வரலாற்றை வெளியிடும் நிகழ்வில் உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நான் அந்த உரையின் தொனிப்பொருளாக இலங்கையின் எதிர்கால நெருக்கடி பற்றிய எனது அவதானிப்பை பயன்படுத்தினேன். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் நாட்டின் சமூக அரசியல் அமைப்பும் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்து நாடு திவாலாகி வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் என்று நான் வலியுறுத்தி இருந்தேன். சுதந்திரமடைந்தது தொடக்கம் நாட்டின் விவகாரங்களின் குழப்பமான தன்மையைச் சுட்டிக்காட்டி நான் அந்த ஆய்வை முன்வைத்தேன். நன்றியுரையில் மங்கள எனது கருத்துக்களை ஏற்றுக்கொண்டதுடன், காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த பல அரசாங்கங்களில் பங்காளியாகச் செயற்பட்டமை மூலம் நாட்டில் ஏற்பட்டுள்ள அழிவுக்கு தானும் ஒரு வகையில் பங்களித்துள்ளதால், அது குறித்து தாம் வருத்தமடைவதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நிகழ்ந்த தொலைபேசி உரையாடலொன்றின் போது, புத்தக வெளியீட்டு விழாவில் நான் ஆற்றிய உரை அவ்வப்போது தனக்குள் எதிரொலிப்பதாக மங்கள சமரவீர என்னிடம் கூறினார். பின்னர் அவர் சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி, முழு அமைப்பிலும் ஆழமான மாற்றத்தின் அவசியத்தை வலுவாக வலியுறுத்தும் ஒருவராக செயற்பட்டார். குறிப்பிட்ட சில முக்கிய தருணங்களில் சீர்திருத்தத் திட்டத்திற்கான வாயிலைத் திறப்பதில் தான் ஒரு முன்னோடி பாத்திரத்தை வகிக்க முடியும் என்றும் அவர் நம்பினார். அவர் எப்போதும் இளைய தலைமுறையினருக்கு ஆதரவாக முன்னின்றவர். ஆனால் நாட்டின் துரதிர்ஷ்டமாக இளைஞர்கள் எழுச்சி ஆரம்பிக்கப்பட முன்பே அவர் இறந்து விட்டார். இளை ஞர் எழுச்சியின் போது அவர் உயிருடன் இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்? இளைஞர்களின் எழுச்சியின் உண்மையான அபிலாஷைகளை அடைவதற்காக அந்தப் போராட்டத்தை அரசியலமைப்பு ரீதியான கட்டமைப் பொன்றுக்குள் மேற் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலுவாக வலியுறுத்துவதுடன், அந்த இலக்கை அடைவதற்கு வலுவாக உறு துணையாக இருக்கும் கொள்கையுடன் செயற்பட்டிருப்பார் என்று நம்புகிறேன்.

## வங்குரோத்து நிலையை வரவேற்றல்

மிக முக்கியமான விடயம் யாதெனில், இலங்கை நெருக்கடியின் போக்கைப் பற்றிய எனது கணிப்புகள் நிதர்சனமாகியிருப்பதன்றி, அதற்குள் உள்ளடங்கியிருந்த பயங்கரமான உண்மையான நாடு திவாலாகுவதுடன், அதனுடன் இணைந்ததாக பயங்கரமான, அழிவுகரமான தன்மையைப் புரிந்து கொள்ள நாடு தவறி விட்டது தான். அராஜக நிலை என்பதன் மூலம் எதிர் அதிகார கட்டமைப்பொன்று உருவாக்கப்படாத நிலையில், அரசாங்கத்தின் அதிகாரக் கட்டமைப்பு சீர்குலையும் சந்தர்ப்பத்தில் ஏற்படக் கூடிய பயங்கரமானதும், குழப்பகரமானதுமான நிலையைக் குறிக்கும். பெர்ட்ரான்ட் ரஸ்ஸல், தனது அதிகாரம்: ஒரு புதிய சமூக பகுப்பாய்வு (“Power: A New Social Analysis” ) புத்தகத்தில், “சர்வாதிகாரத்தை விட அராஜக நிலை மிகவும் பயங்கரமானது மற்றும் அழிவுகரமானது” என்று கூறுகிறார். எனவே, அராஜகத்தை முறியடிக்க முதலில் சர்வாதிகார தன்மையான ஆட்சியொன்றேனும் அமைக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார். ஆனால், தற்போதைய ஊழல் நிறைந்த ராஜபக்சே குடும்ப ஆட்சியை விட அராஜக நிலையே சிறந்தது என்று இலங்கையின் கல்வியாளர்கள் கருதுவதாகத் தெரிகின்றது.

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் நின்ற போராட்டக்காரர்கள் மீது அலரிமாளிகையில் இருந்து வந்த ஆளும் கட்சி ஆதரவாளர்கள் குழுவொன்று தாக்குதல் நடத்தியது சட்டவிரோதமான, கண்டிக்கத்தக்க, கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான சம்பவமாகவே பார்க்க முடியும்.

ஆனால் இதற்கு பதிலடியாக, ஆளும் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்கத்தின் முக்கிய ஆதரவாளர் களின் வீடுகள், உடைமைகள் மற்றும், அரிதாக, உயிர்கள் மீதான தாக்குதல்கள், காலிமுகத்திடலில் நடந்த தாக்குதல் களை விட பல மடங்கு கொடூரமான மற்றும் காட்டுமிராண்டித்தனமானதாக கருதப்படலாம். குறித்த தாக்குதல்களில் பொது மக்கள் சிலரும் ஈடுபட்டிருக்க லாம், ஆனால் அதனை முன்னெடுத்தவர் கள் பொதுமக்களாக இருக்க முடியாது.

கடந்த 9ம் திகதி தொடங்கி கடந்த இரண்டு மூன்று நாட்களாக நாடு முழுவதும் தெளிவான சிந்தனையை இழந்து, ஆவேசமான நிலையில் செயற்படும் நிலைக்குள்ளாகி இருந்ததுடன், நாடு அராஜகத்தின் அதலபாதாளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. புதிய பிரதமரின் நியமனம் அடையாள ரீதியில் நாட்டில் அரசாங்கமொன்றை ஏற்படுத்தி அராஜகத்திற்கான பாதையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. பிரதமராக பதவியேற்ற பின்னர் ஏற்பட்ட மாற்றத்தை, “குரல் வளை நெரிக்கப்பட்ட நிலையில் இருந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை” காப்பாற்றும் முயற்சியாக சிலர் வர்ணித்துள்ளனர். அந்த நடவடிக்கை ராஜபக்ச அரசாங்கத்திற்கு நன்மை பயப்பதாக இருந்த போதிலும், அதனை விடவும் அது நாட்டின் நன்மைக்கு ஏதுவாக இருந்ததாக குறிப்பிடலாம். ராஜபக்ச ஆட்சியை அரசியலமைப்புச் சட்டத்தின் வழிமுறைகளுக்கு அப்பால் சென்று தோற்கடிக்க முயற்சித்தால், அதன் விளைவு சிறந்த மாற்று ஆட்சிக்குப் பதிலாக மிகவும் ஆபத்தான அராஜக நிலையாகவே இருக்கும். இதை வாணலிக்குத் தப்பிஅடுப்பில் விழும் நிலைக்கு ஒப்பிடலாம்.

## தெரிவு செய்யப்பட வேண்டிய பாதை

ராஜபக்ச குடும்ப ஆட்சி மட்டுமன்றி, நாட்டில் நிலவும் தீய, ஊழல் முறையும் தோற்கடிக்கப்பட வேண்டும். அது அரசியலமைப்பு கட்டமைப்பு சீர்திருத்த வேலைத்திட்டத்தின் மூலம் செய்யப்பட வேண்டுமேயன்றி, நாட்டை சீர்குலைக்க ஏதுவாகும் பலவந்தமான முறையில் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான வழிமுறையில் அல்ல. நாடு அராஜக நிலைக்குச் செல்லாமல் தடுப்பதே தற்போது நாடு எதிர்நோக்கும் மிகப்பெரிய சவாலாகும். அத்தகைய நிலைக்கு நாடு செல்வதைத் தடுத்து, நிலுவைத் தொகை நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வலுவான சூழலை உருவாக்கி, முறையான கட்டமைப்பு மாற்றத்தை -ளலளவநஅ உாயபெந- வெல்வதற்கும் ஒரே வழி, நாட்டை ஒரு கட்டமைப்பு ரீதியான சீர்திருத்த திட்டத்திற்கு வழிநடத்துவதுதான். இத்தகைய வேலைத்திட்டம் பிளவுபட்ட அரசியல் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கும் நம்பிக்கையற்ற மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும். சீர்திருத்தத் திட்டத்தை தென்னாப்பிரிக்காவைப் போல இரண்டு முக்கிய கட்டங்களில் செயல்படுத்தப்படும் ஒன்றாக மாற்றலாம். கடன் நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அதே வேளை, பொருத்தமான அரசியல் யாப்பொன்றை வகுத்துக் கொள்வதற்கான பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தி, அந்த அரசியல் யாப்புக்குத் தேவையான பிரதிநிதிகளை தெரிவு செய்து கொள்வதற்கான சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்கைகளை வகுத்துக் கொள்வதற்கான நிலைப்பாட்டை எட்டிக் கொள்ளலாம்.

அரசியல் கட்சிகளின் உட்கட்சி ஜனநாயகத்தை உறுதிப்படுத்த தேர்தல் கமிஷனுக்கு தேவையான அதிகாரங்களை வழங்க முடியும். தேர்தல் பிரச்சாரங்களுக்காக கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் நன்கொடை நிதி மற்றும் செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வைக்கலாம். அதையெல்லாம் சீர்திருத்த திட்டத்தின் முதல் கட்ட வேலையாக மேற்கொள்ளலாம்.

சீர்திருத்தங்களின் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்கள் தொடர்ச்சியான சீர்திருத்தத் திட்டத்தின் இரண்டு கட்டங்களாக இருக்க வேண்டும், மேலும் சீர்திருத்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டமானது, தேர்தலில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், இரண்டாம் கட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை அதே வடிவத்தில் நடைமுறைப்படுத்துவதை தவிர்க்க முடியாத அரசியலமைப்பு ரீதியான பொறுப்பாக மாற்றப்பட வேண்டும்.

அந்தச் சீர்திருத்தத் திட்டத்தின் பார்வையாளராக ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்குவதன் மூலம், அது ஒரு துணைச் சட்டம் மற்றும் பொதுப் பங்கேற்பு அரசியலமைப்பை உருவாக்கத் தேவையான வழிகாட்டுதல்களையும் தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும். கட்டமைப்பில் நேர்மறையான மற்றும் ஆழமான மாற்றத்தைக் கொண்டுவரும் சீர்திருத்தத் திட்டத்தில் இருந்து முற்றிலும் விலகி நிற்கும் ஆற்றல் அரசியல் கட்சிகளுக்கு இருக்கப்போவதில்லை. அதன் காரணமாக சிலவேளை சீர்திருத்தத் திட்டம் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு உறுதியான அடித்தளத்தை அமைக்கும் ஒன்றாக மாற்றம் பெறவும் கூடும்.



**மூலம்:** Anarchy is more dangerous than dictatorship

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |
| **60.** | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

## கல்வி tv CHANNEL-1

**03.06.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**03.06.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# புகையிலையற்ற பிரதேசத்தை உருவாக்கும் திட்டம் கிழக்கில்!

### மட்டக்களப்பில் நேற்று ஆரம்ப நிகழ்வு

மட்டக்களப்பு, ஜுன். 03

**இலங்கையில் உள்ள 342 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் புகையிலையற்ற பிரதேசத்தினை உருவாக்கும் வகையில் நேற்று புகையிலையற்ற வார நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.**



தேசிய புகையிலை தவிர்ப்பு தினம் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இலங்கை சுகாதார அமைச்சும் சுகாதாரத் திணைக்களமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து முன்னெடுத்துள்ளன.

இதன் மட்டக்களப்பு மாவட்ட பிரதான நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் அதன் பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் நடைபெற்றது.

தேசிய புகையிலை தவிர்ப்பு தினத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் புகையிலையற்ற பிரதேசத்தை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகப் பகுதி புகையிலை தவிர்ப்பு பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டு அது தொடர்பான அறிவுறுத்தல் பலகையும் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் மருத்துவர் மு.அச்சுதன் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள்,வைத்திய அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மருத்துவர் குணசிங்கம் சுகுணன், "எமது நாட்டில் புற்றுநோயும் சுவாசப்பிரச்சினை தொடர்பான நோய்களும் பெருமளவில் ஏற்படுத்தும் விடயங்களாக புகைப்பிடித்தலும் புகையிலை தொடர்பான பொருட்கள் என பல காரணிகள் காணப்படுவதையிட்டு இலங்கை அரசாங்கத்தின் சுகாதார அமைச்சு தேசிய புகையிலை தவிர்ப்பு தினத்தை அனுஷ்டித்து வருகின்றது.

அநேகமான புற்றுநோய்களுக்கு புகைத்தலே முக்கியமான காரணமாக அமைகின்றது. இவற்றையெல்லாம் நிறுத்தவேண்டிய கடமைப்பாடு எமக்கு உள்ளது.

அந்த வகையில் இலங்கையில் காணப்படும் 342 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் பிரிவுகளிலும் ஒரு புகையிலையற்ற பிரதேசத்தை உருவாக்குவதை முதன்மையான நோக்காக கொண்டு இந்த தேசிய புகையிலை தவிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஒன்றுக்கு மேற்பட்ட புகையிலை பாவனையற்ற இடங்களை உருவாக்கவுள்ளோம். அந்த பகுதிகளில் புகையிலை பாவிப்பதோ,விற்பதோ அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்படும்.இது தொடர்பில் அறிவுறுத்தல்கள் தொடக்கம் ஆரம்பித்து சட்ட நடவடிக்கைகள் வரையில் முன்கொண்டு பூர்த்தி செய்யவுள்ளோம்.

இலங்கையை பொறுத்தவரை புகையிலை பாவனையும் சரி, புகைத்தலும் சரி குறைந்து செல்லும் நிலையை காண முடிகின்றது. நாட்டில் 15 வீதமான காணப்பட்ட புகைப்பிடித்தல் அளவு 9.1வீதமாக குறைவடைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தை புகையிலை பாவனையற்ற மாவட்டமாக உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புமிக்க விடயமாக கையாளவுள்ளோம். இதனை மிகவிரையில் பார்க்கமுடியம்- என்றார். (அ)

## காரைதீவில் இடம்பெற்ற பாலின வன்முறை தடுப்பு குழுக் கூட்டம்



அம்பாறை, ஜுன். 03

நாட்டில் ஆங்காங்கே பல்வேறு பாலின வன்முறை சம்பவங்கள் பதிவாகிவரும் சூழ்நிலையில் காரைதீவு பிரதேச செயலக சிறுவர் பெண்கள் அபிவிருத்தி பிரிவு ஏற்பாடு செய்திருந்த காரைதீவு பிரதேச பாலின வன்முறை தடுப்பு செயலணி குழுக்கூட்டம் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ் பாத்தீபன், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் தஸ்லீமா வஸீர், காரைதீவு பிரதேச சபை செயலாளர், மதுவரி திணைக்கள உத்தியோகத்தர் ,சிறுவர் நன்நடத்தை திணைக்கள உத்தியோகத்தர், தொழில் அலுவலக உத்தியோகத்தர் , கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை உத்தியோகத்தர், தொழிற்பயிற்சி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களில் இருந்தும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதேசத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர் நோக்கும் பல்வேறுபட்ட பிரச்னைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (அ)

## மகிழடித்தீவு வைத்தியசாலையில் ஆரோக்கிய சுகவாழ்வு நிலையம்!



மட்டக்களப்பு, ஜுன். 03

பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதார தேவையை ஏனைய மக்களுக்கு கிடைக் கும் சேவைக்கு சமன் செய்யும் முகமாக உலக வங்கியின் திட்டத்திற்குள் உள் வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட மகிழடித்தீவு வைத்தியசாலையில் நவீன ஆய்வுகூடம், மருந்தகத்தைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் நேற்று முன் தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க. கருணாகரனால் திறந்து வைக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலையில் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு ஆதார வைத்தியசாலையில் கிடைக்கக்கூடிய தரத்தில் சேவைகள் கிடைக்கக்கூடிய விதத்தில் இந்த வைத்தியசாலை தரமு யர்த்தப்பட்டுள்ளது.

இது பட்டிப்பளை மக்களின் வரப்பிரசாதமாக பலரின் உழைப்பில் உருவாக்கப்பட்டுள்ளதாக நிகழ்வுக்கு தலைமை தாங்கிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார். (அ)

## மட்டக்களப்பு வைத்தியசாலைகளுக்கு 18 வைத்திய அதிகாரிகள் நியமனம்!



மட்டக்களப்பு, ஜுன். 03

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளுக்கு 18 வைத்திய அதிகாரிகள் நியமனம் பெற்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் சுகாதார பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வின்போது வைத்தியங்கள் தமது கடமைகளைப் பெறுப்பேற்றுள்ளனர்.

நீண்ட காலமாக ஆளணியற்று காணப்பட்ட வாகரை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மாங்கேணி வைத்தியசாலை, மீராவோடை வைத்தியசாலை, காங்கேயனோடை வைத்தியசாலை, திக்கோடை வைத்தியசாலை, களுவாஞ்சிகுடி, காத்தான்குடி, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகளுக்கே புதிதாக கடமையோற்ற வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான சுகாதார சேவையை தம்மால் முடிந்த வரை மேம்படுத்த திடசங்கற்பம் கொண்டு தடைகளை உடைத்தபடி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்நோக்கி செல்லும் என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தனது தலைமையுரையில் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## வியாபார நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மானிய அடிப்படையில் உதவி




அம்பாறை, ஜுன். 03

கொரோனா அனர்த்தத்தில் தமது வியாபார நடவடிக்கைகளில் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டிருந்த பெண்களுக்கான மானிய அடிப்படையில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரண்டினா நிறுவனத்தின் அனுசரணையில் நேற்று கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகத்தின் 28 பயனாளிகள் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட இரண்டு பயனாளிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா மானிய அடிப்படை யில் வழங்கப்பட்டது.

கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்கினார்.

இதேவேளை, பிரண்டினா நிறுவனத்தின் தலைமை காரியாலயத்தில் ஏனைய பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் பி.பிரதிலிபன் , மாவட்ட வியாபார அபிவிருத்தி சேவைகள் ஒருங்கிணைப்பாளர் எஸ்.தினேஸ், கல்முனை கிளை முகாமையாளர் கே.கோபிகரன், வியாபார அவிருத்தி உத்தி யோகத்தர் எஸ்.ஜெயரூபன் ,நீர்ப்பாசன திணைக்களத்தின் முன்னாள் பொறியியலாளர் நந்தகுமார், உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# ஐரோப்பிய பாதுகாப்பில் இணைய டென்மார்க் மக்கள் அமோக ஆதரவு!

## முக்கிய கருத்து கணிப்பு வாக்கில் “ஆம்” தரப்பினர் பெரு வெற்றி

கொப்பன்கேஹன், ஜூன். 03

டென்மார்க் நாடு ஐரோப்பிய ஒன்றியத்துடனான பொதுப் பாதுகாப்பு ஒத்துழைப்புகளில் இருந்து விலகித் தனித்து இருந்த காலம் முடிவுக்குக் வருகிறது. அங்கு நடைபெற்ற மிகமுக்கியமான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றில் டெனிஷ் மக்கள் தங்கள்பாதுகாப்பு விடயங்களில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து இருப்பதை ஆதரித்து அமோகமாக வாக்களித்திருக்கின்றனர்.



டென்மார்க் கடந்த முப்பது ஆண்டு காலமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளில் எந்த வகையிலும் கலக்காமல் விலகி இருந்து வருகிறது. ஆனால் உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து அந்தப் பிராந்தியத்தில் டென்மார்க்கின் பாதுகாப்புக்குப்பெரும் அச்சுறுத்தல் தோன்றியுள்ளது.

அதனால் பாதுகாப்பு விடயங்களில் அது ஐரோப்பிய ஒன்றியத்துடன் நெருங்கி இருப்பது அவசியமாகியுள்ளது. எனவே ஐரோப்பாவின் பொதுப் பாதுகாப்புக் கொள்கையில் இணைவதா இல்லையா என்பதில் மக்களின் கருத்தை அறியும் பொதுசன வாக்கெடுப்பு நேற்று அங்கு நடத்தப்பட்டது. “ஆம்” அல்லது “இல்லை” என்ற இரண்டு தெரிவுகள் வாக்காளர்கள் முன்பாக விடப்பட்டன. நள்ளிரவு வெளியாகிய முடிவுகளின் படி 66.9 வீதமானவர்கள் “ஆம்”என்று வாக்களித்து ஐரோப்பாவின் பொதுப் பாதுகாப்பில் இணைவதற்குத் தெளிவான ஆணையை வழங்கியுள்ளனர்.

33.1 வீதமானவர்கள் “இல்லை” என்று வாக்களித்திருக்கின்றனர். நேட்டோ அமைப்பின் ஸ்தாபக நாடுகளில் ஒன்றாகிய டென்மார்க் அந்த அமைப்புடன் இராணுவ ஒத்துழைப்புகளைப் பேணிவந்த போதிலும், ஐரோப்பிய ஒன்றியத்துடன் பொதுவான பாதுகாப்பு ஒப்பந்தங்களில் இணைந்திருக்கவில்லை. 1993 இல் நாட்டில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பு, ஐரோப்பாவுடன் கூட்டுறவு அடிப்படையில் இயங்குவதை தடுத்திருந்தது.

அன்று முதல் கடந்த 30 ஆண்டு காலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுப் பாதுகாப்புக் கொள்கைகளில் விலகியிருந்த டென்மார்க், நேற்றைய வாக்கெடுப்பு மூலம் அதனை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் விளைவாக ஐரோப்பிய நாடுகள் தங்களது பாதுகாப்பு விடயத்தில் ஐக்கியப்பட்டு நிற்க விரும்புவதை டென்மார்க் மக்களின் தீர்ப்பு எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (அ)

# துப்பாக்கி வன்முறைகளால் அதிர்ந்து வரும் அமெரிக்கா

## ஒக்லஹோமாவில் நால்வர் சுட்டுக்கொலை



வாஷிங்ரன், ஜூன். 03

அமெரிக்கா - ஒக்லஹோமாவின் துல்சாவில் உள்ள ஒரு மருத்துவ மைய கட்டடத்துக்குள் புகுந்து ஆயுததாரி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

கொலையாளி இயந்திர துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கியுடன் கண்ணில் தென்பட்ட அனைவரையும் சரமாரியாகச் சுட்டதாக சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

நால்வரைக் கொன்ற துப்பாக்கிதாரி பின்னர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

உள்ளூர் நேரப்படி நேற்று முன் தினம் புதன் கிழமை மதியம் சென். பிரான்சிஸ் மருத்துவ மைய வளாகத்தில் துப்பாக்கிச் சூடு நடந்ததாக பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

உடனடியாக பொலிஸார் அங்கு விரைந்து போது கட்டடத்துக்குள் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக துல்சா நகர பொலிஸ் துணைத் தலைமை அதிகாரி எரிக் டால்க் லீஷ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்த பின்னரே கொலையாளி தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்திருக்கலாம் என கருதப்படுகிறது.

கடந்த வாரம் டெக்சாஸில் ஆரம்ப பாடசாலை வகுப்பறைக்குள் நுழைந்த ஆயுததாரி 19 சிறுவர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்களை கொன்ற சம்பவத்தின் பரபரப்பு அடங்குவதற்குள் மற்றொரு துப்பாக்கிச் சூட்டு வன்முறை பதிவாகியுள்ளது.

துல்சாவில் துப்பாக்கிச் சூடு நடத்தி நால்வரைக் கொன்று தற்கொலை செய்துகொண்ட நபர் 35 மற்றும் 40 வயதுக்கு இடைப்பட்டவர் என்றும், அவரது நோக்கம் குறித்து இதுவரை எந்த விவரமும் இல்லை என்றும் துல்சா நகர பொலிஸ் துணைத் தலைமை அதி காரி எரிக் டால்க்லீஷ் கூறினார்.

துல்சா மருத்துவ மையத்தில் எலும்பு நோய் சிகிச்சை மையம், மருத்துவர்களின் அலுவலகங்கள் உள்ளன. இங்கு படுகொலை செய்யப்பட்டவர்களில் மருத்துவ மைய ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் அடங்குவதாக டால்க்லீஷ் தெரிவித்தார்.

ஒக்லஹோமா மாகாண தலைநகரின் வடகிழக்கில் சுமார் 160 கி.மீற்றர் தொலைவில் உள்ள துல்சா நகரில் 411,000 வரையான மக்கள் வசிக்கின்றனர்.

இங்கு இடம்பெற்ற படுகொலை குறித்து மாகாண, நகர அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி ஜோ பைடன் ஆகியோருக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அதிநவீன ஆளில்லா தாக்குதல் விமானங்களை உக்ரைனுக்கு விற்பதற்கு அமெரிக்கா திட்டம்!

வாஷிங்டன், ஜூன். 03

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனின் பயன்பாட்டிற்காக ஹெல்பயர் ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களை சுமந்து சென்று தாக்குதல் நடத்தக்கூடிய நவீன ரக நான்கு ஆளில்லா விமானங்களை விற்பனை செய்ய அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக இது குறித்த விடயங்களை நன்கறிந்த 3 அதிகாரிகளை மேற்கோள் காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஆளில்லா விமானங்களை விற்பனை செய்யும் திட்டத்தை ஜோ பைடன் நிர்வாகம் கொண்டுள்ள போதும், அமெரிக்கா காங்கிரஸ் ஒப்புதலை இதற்காக பெற வேண்டியுள்ளது. பைடன் நிர்வாகத்தின் இந்த திட்டத்துக்கு காங்கிரஸ் தடைபோடக்கூடிய சாத்தியங்களும் உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு நீண்ட தூர அதிநவீன ஏவுகணை அமைப்புகளை அனுப்பவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்த சில நாட்களில் அதிநவீன ஆளில்லா தாக்குதல் விமானங்களை விற்கும் அமெரிக்காவின் திட்டம் வெளியாகியுள்ளது.

இந்த வகை ஆளில்லா தாக்குதல் விமானங்களை அமெரிக்காவிடம் இருந்து உக்ரைன் பெற்றால் அது போரில் உக்ரைனுக்கு மிகப்பெரிய பலமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

இந்த வகை ஆளில்லா விமானங்கள் அதன் பணியைப் பொறுத்து 30 அல்லது அதற்கு மேற்பட்ட மணி நேரம் வரை பறக்கக்கூடியவை. அத்துடன், இவற்றைப் பயன்படுத்தி உளவுத் துறை நோக்கங்களுக்காக அதிக அளவு தரவுகளை சேகரிக்க முடியும். ஒரே நேரத்தில் எட்டு வரையான சக்திவாய்ந்த ஹெல்பயர் ஏவுகணைகளை எடுத்துச் சென்று தாக்குதல் நடத்தும் திறனையும் இந்த வகை ஆளில்லா விமானங்கள் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரேசில் இயற்கை அனர்த்தங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 107!

பிரேசிலியா, ஜூன். 03

பிரேசில் வட-கிழக்கு பெர்னாம்புகோ மாநிலத்தில் கடந்த வாரம் பெய்த கனமழை-வெள்ளம், நிலச்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால் இறந்தவர்களின் எண்ணிக்கை நேற்று புதன்கிழமை வரையில் 107 ஆக உயர்ந்துள்ளது. 11 பேர் தொடர்ந்து காணாமல் போயுள்ளதாக பிரேசில் அரசு அறிவித்துள்ளது.

குறைந்தபட்சம் 6,650 பேர் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட அனர்த்தங்களால் இடம்பெயர்ந்துள்ளனர். பல வீடுகள் மண்ணில் புதைந்தன. பெர்னாம்புகோ மாநில தலைநகர் ரெசிப் மற்றும் அதன் பெருநகரப் பகுதியில் பெரும்பாலான இறப்புகள் நிகழ்ந்தன.

1966 ஆம் ஆண்டு பிரேசிலில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் 175 பேர் இறந்த பின்னர் பெர்னாம்புகோவின் வரலாற்றில் இரண்டாவது பெரிய இறப்புக்கள் இயற்கை அனர்த்தங்களால் கடந்த வாரம் பதிவாகியுள்ளன. தீயணைப்பு வீரர்கள், பிரேசில் இராணுவத்தினர் பயிற்சி பெற்ற மீட்பு நாய்களின் உதவியுடன் காணாமல் போனவர்களை தேடி தொடர்ந்து தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

பெர்னாம்புகோ மாநிலத்தில் 24 நகராட்சிகள் அவசரகால நிலையை அறிவித்துள்ளன. மேலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் கட்டமைக்க சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்குவதாக பிரேசில் மத்திய அரசு அறிவித்துள்ளது.

செர்ஜிப், பரைபா, ரியோ கிராண்டே டோ நோர்டே மற்றும் அலகோவாஸ் ஆகிய மாநிலங்களிலும் மழை பெய்தது. அங்கு மூன்று பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 18,000 க்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் பிரேசில் மத்திய அரசு தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பணவீக்கம்: 20 ஆண்டுகளுக்குப் பின் தண்ணீர் போத்தல் விலை அதிகரிப்பு

ஐரோப்பாவில் அதிகரித்து வரும் பணவீக்கம் சாதாரணமாகக் கொள்முதல் செய்கின்ற நாளாந்தப் பொருள்கள் அனைத்தினது விலைகளிலும் தாக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

பிரெஞ்சு மக்களின் அபிமானம் பெற்ற கிறிஸ்டலின் குடி தண்ணீர் போத்தல்களின் விலை கடந்த இருபது ஆண்டுகளின் பின்னர் முதல் முறையாக 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் பல்பொருள் அங்காடிகளில் மிக அதிக எண்ணிக்கையில் விற்பனையாகின்ற தண்ணீர் போத்தல் என்ற பெருமைக்குரிய “கிறிஸ்டலின்” வகைகளில் 1.5 லீற்றர் தண்ணீர் அடங்கிய ஆறு போத்தல்கள் கொண்ட பொதிகள் விற்பனையில் முதலிடத்தில் உள்ளன.

கடந்த ஆண்டு மட்டும் நாடு முழுவதும் விற்பனையாகிய இந்தப் போத்தல்களின் மொத்தத் தொகை 233 மில்லியன்கள் ஆகும்.

புதிய விலை அதிகரிப்பின் படி ஆறு பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட கிறிஸ்டலின் தண்ணீருக்கு இனி மேல் அதன் விலையில் பத்து வீதத்தை மேலதிகமாகச் செலுத்த வேண்டி இருக்கும்.

எரிபொருள் விலை அதிகரிப்புக் காரணமாகப் போத்தல்களுக்கான பிளாஸ்ரிக்கின் விலை உலக சந்தையில் 39 வீதத்தால் உயர்ந்துள்ளது. தண்ணீர்ப் போத்தல் விலை அதிகரிப்புக்கு இதுவே பிரதான காரணமாகும். அத்துடன் போக்குவரத்துச் செலவு அதிகரித்துள்ளதும் தண்ணீர் போத்தல் விநியோகச் செலவுகளும் உயர்ந்துள்ளன. (அ)

# ‘பிரிட்டிஷ் பேரரசின் ஆணை’ விருது; இங்கிலாந்தின் மொயின் அலிக்கு



லண்டன், ஜூன் 03

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான மொயின் அலி கிரிகெட்டில் ஆற்றிவரும் சேவைக்காக மகா ராணியின் பிறந்தநாளை முன்னிட்டு “பிரிட்டிஷ் பேரரசின் ஆணை“ (Order of the British Empire) விருது வழங்கப்பட உள்ளது .

மகாராணியின் பிறந்தநாளன்று கௌரவிக்கும் விருதுப் பட்டியலில் மொயின் அலியும் சேர்க்கப்பட்டுள்ளார். அவரின் 16 வருட கிரிக்கெட் வாழ்வில் 225 போட்டிகளில் நாட்டுக்காக விளையாடியுள்ளார்.

34 வயதான மொயின் அலி, கடந்த வருடம் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தார். 64 டெஸ்ட் போட்டிகளில் 195 விக்கெட்கள், 2,914 ஓட்டங்களை எடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் இவரின் பங்களிப்பு முக்கியமானது. இதனால் அவருக்கு பிரிட்டிஷ் பேரரசின் ஆணை விருது வழங்கப்பட்டுள்ளது.

“கண்டிப்பாக இந்த கௌரவம் முக்கியமானது. இந்த விருதைப் பெற்றுக் கொள்வதால் எனது பெற்றோர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். அதனாலேயே இந்த விருதைப் ஆவலாக பெற்றுக்கொள்வேன். முன்னுதாரணம் என்ற வார்த்தையை உபயோகிக்க எனக்கு பிடிக்காவிட்டலும் என்னைப் பார்த்து மக்கள் உத்வேகமடைந்திருந்தால் மகிழ்ச்சிதான். எனது பின்னணி, விளையாடும் முறை, கிரிக்கெட்டுக்கு வந்த விதம் ஆகிய ஏதோவொன்று மக்களுக்கு என்னிடம் பிடித்திருக்கலாம். குறிப்பாக, நகரத்தின் உட்பகுதியில் இருக்கும் மக்கள் என்னை எளிதாக அவர்களுடன் தொடர்புபடுத்திக் கொண்டிருப்பார்கள்.

குறிப்பிட்ட எல்லை வரைக்கும் எனக்கு முன்னுதாரணம் என்ற வார்த்தை பிடிக்காவிட்டாலும், எனது பங்கு என்ன, என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும்” என மொயின் அலி கூறினார்.



# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் சானியா இணை தோல்வி!

பாரிஸ், ஜூன் 03

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சானியா மிர்சா இணை தோற்று வெளியேறியது.

பாரிஸில் நடக்கும் கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில் மகளிர் இரட்டையர் பிரிவின் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, செக் குடியரசின் லூசி ஹ்ரடேக்கா இணை அமெரிக்காவின் கோகா காஃப், ஜெசிகா பெகுலா ஜோடியை எதிர்த்து விளையாடியது.

இதில் சானியா மிர்சா ஜோடி 4-6, 3-6 என்ற நேர் செற்களில் தோல்வியடைந்தது. (ஐ)



பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ்:

# ஸ்வியாரெக், கசட்கினா அரையிறுதிக்கு தகுதி!

பாரிஸ், ஜூன் 03

பாரிஸில் நேற்று நடந்த பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு இகா ஸ்வியாரெக், கசட்கினா ஆகியோர் முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்றதும் களிமண் தரை போட்டியுமான பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸின் காலிறுதிப் போட்டி நேற்று நடந்தது.

இதில், உலகின் முதல்நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக், அமெரிக்காவின் ஜெசிகா பெகுலாவுடன் மோதினார்.

இந்த போட்டியில் இகா ஸ்வியாரெக், 6-3, 6-2 என்ற செற் கணக்கில் பெகுலாவை வீழ்த்தி வெற்றி பெற்று அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு காலிறுதி போட்டியில் ரஷ்ய வீராங்கனை வெரோனிகா குடெர்மெடோவா சகநாட்டு வீராங்கனையான டாரியா கசட்கினாவுடன் மோதினார். இந்த போட்டியில் டாரியா 6-4, 7-6 (7-5) என்ற செற் கணக்கில் வெரோனிகாவை வீழ்த்தி அரையிறுதி போட்டிக்கு முன்னேறினார்.

இன்று நடைபெறவுள்ள அரையிறுதி போட்டியில் கசட்கினா, இகாவுடன் மோதுகிறார்.

# நியூசிலாந்துடனான டெஸ்ட் இங்கிலந்தில் அண்டர்சன்!

லண்டன், ஜூன் 03

நியூசிலாந்துக்கு எதிராக லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் மூத்த வேகப்பந்து வீச்சாளர்கள் ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்ரூவர்ட் பிரொட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து சென்றுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

அணி விவரம்: சாக் கிராவ்லி, அலெக்ஸ் லீஸ், அலி போப், ஜோ ரூட், ஜொன்னி பெயர்ஸ்ரோ, பென் ஸ்ரோக்ஸ் (அணித் தலைவர்), பென் போக்ஸ் (விக்கெட் காப்பாளர்), மத்தியூ பட்ஸ், ஜேக் லீச், ஸ்ரூவர்ட் பிராட், ஜேம்ஸ் அண்டர்சன்.






# மேற்கிந்தியா செல்கிறது இந்திய கிரிக்கெட் அணி!

புதுடில்லி, ஜூன் 03

3 ஒருநாள் போட்டி, ஐந்து இருபது - 20 தொடர்களில் விளையாடுவதற்காக அடுத்த மாதம் இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு செல்கிறது.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தொடர் இந்தியா வில் நடக்கிறது. இதைத் தொடர்ந்து அயர்லாந்துடன் இரண்டு இருபது - 20 போட்டி தொடரிலும், இங்கி லாந்து அணிக்கு எதிராக ஒத்தி வைக்கப்பட்ட கடைசி டெஸ்ட் போட்டியிலும் விளையாடுகிறது. இதைத் தொடர்ந்து 3 ஒருநாள் போட்டிகளிலும் இந்திய அணி பங்கேற்கும்.

இதைத் தொடர்ந்து ஜூலை 22 முதல் ஓகஸ்ட் 7ஆம் திகதி வரை மேற்கிந்தியத் தீவுகளுக்கு இந்திய அணி செல்லவுள்ளது.

அங்கு 3 ஒருநாள் போட்டிகள், 5 இருபது - 20 தொடர்களில் பங்கேற்கும். உலகக் கிண்ணத்தைக் கருத் தில் கொண்டு இந்திய அணிக்கு இந்த சுற்றுப்பயணம் அமைக்கப்பட்டுள்ளது.

20 ஓவர் உலகக் கிண்ணம் ஒக்ரோபர் 16ஆம் திகதி முதல் டிசெம்பர் 13ஆம் திகதி வரை அவுஸ்திரேலி யாவில் நடக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.



# தமிழக நிவாரணத்தில் பாரபட்சம் வேண்டாம்!

## வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 03**

**இந்திய உதவித் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கும் போது கடந்த காலங்களைப் போன்று மலையக மக்களுக்கு பாராபட்சம் காட்டப்படக் கூடாது என்று கண்டி மாவட்டப் பாராளுமன்ற அங்கத்தவர் வேலுகுமார் தெரிவித்தார்.**

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

மலையக அரசியல் வாதிகள் மத்தியில் மேற்படி விடயம் தொடர்பாக கூட்டு வேலைத் திட்டம் ஒன்று தேவை? இல் லாத விடத்து கடந்த காலங்கள் போன்று அவை சிதறடிக்கப்ப டலாம். தற்பேதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு உதவி செய்ய முறை யான பொருளாதார வேலைத் திட்டம் ஒன்று தேவை.

சரியான பொருளாதாரத் திட்டம் இல்லை என்றால் அத்தியாவசியப் பண்டங்களுக் கான வரிசைகள் தீரப்போவ தில்லை.

தமிழ் நாடு அரசு வழங்கிய 2 பில்லியன் உதவிக்கான பொரு ளாதார வேலைத்திட்டம் என்ன? இந்திய உதவி முறையா கப் பகிரப்பட வேண்டும். கொவிட் கால உதவி போல் முறையற்ற வகையில் பகிரப் படக்கூடாது எனக் கேட்டுக் கொள்கிறோம்.

உலக வங்கி இலங்கைக்கு நிதி உதவி செய்ய ஏன் மறுக் கிறது, அப்படியாயின் இலங் கையில் முறையான பொருளா தார திட்டம் மற்றும் கொள்கை ஒன்று இல்லையா?-என்றார். (அ)

# சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகள் ஜூன் 17 ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 03

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை யின் விடைத்தாள் திருத்தப் பணிகள் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் நேற்று முன் தினம் நிறைவடைந்த நிலையிலேயே இந்த அறிவிப்பானது பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேனவினால் வெளியிடப்பட்டுள்ளது.

விடைத்தாள் திருத்தப் பணிகள் இரண்டு கட்டங்க ளாக இடம்பெறவுள்ளன. முதல் கட்டம் எதிர்வரும் 17ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதி வரை நடைபெறும். இரண்டாம் கட்டம் எதிர்வரும் 30ஆம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 9ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

விடைத்தாள் திருத்தப் பணி யில் ஈடுபடவுள்ள ஆசிரியர் களை தெளிவூட்டும் கருத்த ரங்கு எதிர்வரும் 5ஆம் திகதி யிலிருந்து 8ஆம் திகதி வரை இரண்டு கட்டங்களாக இடம் பெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரி வித்தார்.

நாட்டில் தற்போது நிலவி வரும் சவால்களுக்கு மத்தியில் இம்முறை கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைகள் வெற்றிகரமாக நடத்து முடிந்துள்ளன.

இந்த நிலையில், பரீட்சை கள் பற்றி சில முறைபாடுகள் மாத்திரமே கிடைக்கப் பெற்ற தாகவும் இந்த முறைபாடுகள் பற்றிய விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டிருப்பதா கவும் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன மேலும் கூறினார். (அ)

# நாணய நிதியத்திடம் போனால் நாடு ஆபத்து நிலைக்கு செல்லும்

## எச்சரிக்கிறார் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜூன் 03

சர்வதேச நாணய நிதியத் துக்கு சென்று, நாட்டை ஒரு போதும் மீட்டெடுக்க முடி யாது என்று ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் பிமல் ரத்நாயக்க தெரி வித்துள்ளார்.

மேலும், கிறீஸ் நாட்டுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக் கும் ஏற்படக்கூடிய வாய்ப்புள் ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் கூட்டமொன் றில் கலந்து கொண்டு உரையாற் றிய அவர், ''சர்வதேச நாணய நிதியத்துக்கு சென்று, மீண்டெ ழுந்த நாடுகள் உலகில் இல்லை.

1998 இல் இருந்து ஆர்ஜன் டீனா 9 தடவைகள் ஐ.எம். எப்பிடம் கடன் பெற்றுள்ளது. இந்த 9 தடவைகளும் அந்நாடு கடுமையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தது.

சர்வதேச நாணய நிதியத் துக்கு சென்று இலங்கை போன்ற சிறிய நாடுகளால் ஒருபோதும் மேலே வரமுடியாது.

கிறீஸ் எம்மை விட பல மடங்கு பெரிய நாடாகும். 13 வருடங்கள் நாணய நிதியத்துக் குச் சென்று, கடந்த வருடம் தான் அந்த நாட்டில் சிறியதொரு முன்னேற்றம் ஏற்பட்டது.

ஆனால், இந்தக் காலப் பகுதியில் நாட்டின் மின்சாரக் கட்டமைப்பு, நீர் சுத்திகரிப்பு நிறுவனங்கள், துறைமுகங்கள் என அனைத்தையும் கிறீஸ் விற்பனை செய்தது. இதே போன்று தான் இலங்கையிலும் ஏற்படும்.

இப்போதுள்ள ஆட்சியாளர் கள் இன்னும் இருந்தால் தனிந பர் கடன் தொகை இன்னமும் உயரும். கிறீஸ் நாட்டைப் போன்று, நாட்டின் ஏனைய சொத்துக்களையும் விற்பனை செய்யும் நிலைமை ஏற்படும்.

தனிநபர் வருமானத்தை விட தனிநபர் கடன்தொகை இன்று அதிகரித்துள்ளது. கோட்டா- ரணில்- ஹரின் போன்றோரை வைத்து நாட் டில் எதையும் செய்ய முடி யாது. இவர்களால் மக்களை மீட்டெடுக்க முடியாது-என் றார். (அ)

## மரண அறிவித்தல்

மலர்வு
14 - 03 - 1935



உதிர்வு
28 - 05 - 2022

### கனகரத்தினம் சுப்பிரமணியம்

(ப. நோ. கூ. சங்கம்- வவுனியா)

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Kornwestheim ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சுப்பிரமணியம் அவர் கள் 28.05.2022 சனிக்கிழமை அன்று ஜேர்மனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சுந்தராம் பாள் தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா சிவஞானம் (மானிப் பாய்) தம்பதிகளின் அன்பு மருமகனும்,புனிதவதி(ஜேர்மனி) அவர்க ளின் ஆருயிர்க் கணவரும், மஞ்சுளா (Vancouver - கனடா), கணன் (London, பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமணன் (Vancouver-Canada) அவர்களின் அன்பு மாமனாரும்,மாலவன், ஆதவன் ஆகியோரின் அன்புப் பேரனும்,காலஞ்சென்றவர்களான நாகம்மா, சிவபாதசுந்தரம், இரத்தினசபாபதி, இராசம்மா, சின் னம்மா, புவனேஸ்வரி, சீவரத்தினம் மற்றும் பாக்கியம்(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,காலஞ்சென்றவர்களான சின் னையா, சோதிப்பிள்ளை, கனகம்மா, நாகலிங்கம், இளையதம்பி, நடராசா, சபாரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 05 Jun 2022 3:00 PM - 5:00 PM
Monday, 06 Jun 2022 4:00 PM - 6:00 PM
Neuer Friedhof Aldinger Str. 27, 70806 Kornwestheim, Germany

கிரியை
Wednesday, 08 Jun 2022 10:00 AM - 2:00 PM
Neuer Friedhof Aldinger Str. 27, 70806 Kornwestheim, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**புனிதவதி - மனைவி** Mobile : +4971547493
**கணன் - மகன்** Mobile : +447402291621
**மஞ்சு - மகள்** Mobile : +16048256735
**ரமணன் - மருமகன்** Mobile : +16048254540
**சூரியா - உறவினர்** Mobile : +4915111131235

# வவுனியாவில் இளைஞன் மாயம்!

வவுனியா, ஜூன் 03

வவுனியா குருமன்காட்டை சேர்ந்த கயேந்திரன் கிருத்திகன் என்ற இளைஞரை நேற்று முன்தினத்திலிருந்து காண வில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.

குருமன்காடு பகுதியை சேர்ந்த குறித்த இளைஞர் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் தனது வீட்டில் இருந்து வெளியே சென்றுள் ளார்.

எனினும் நீண்ட நேரமாகி யும் அவர் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து அவரது குடும்பத்தினர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்துள்ளனர். (அ)

# கட்சிச் செயலர்களுடன் 6 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவினர் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 03

அனைத்து கட்சிகளின் செய லாளர்களையும் எதிர்வரும் 06ஆம் திகதி முன்னிலையாகு மாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2022 வாக்காளர் பட்டியல் மற்றும் தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து கட்சிகளு டன் ஆலோசனை நடத்தவும் தமது நிலைப்பாட்டை தெரி விக்கவும் இந்த கலந்துரையா டலை நடத்தவுள்ளதாக ஆணைக் குழு தெரிவித்துள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டி யலை எதிர் வரும் ஒக்ரோபர் 31ஆம் திகதிக்குள் சான்றுப்படுத் துவதற்கு எதிர் பார்த்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட் டியுள்ளது. (அ)

# இந்தியாவிற்கு விஜயம் செய்யுமாறு மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு!

கொழும்பு, ஜூன் 03

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு இந்திய பாராளுமன்ற உறுப்பினர் சுப் பிரமணியன் சுவாமி அழைப்பு விடுத்துள்ளார்.அவர் தனது ருவிட்டர் பதிவில்-

''எனது நண்பரும் இலங் கைத் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு வருமாறும் டில்லியில் பொதுக் கூட்டத்தில் பேசவும், இந்து மற்றும் புத்த கோயில்களுக்குச் செல்லவும் அழைப்பு விடுக்க முடிவு செய்துள்ளேன்.

அவர் பருவமழைக்கு முன் னர் ஜூன் மாதத்தில் நாட்டுக்கு வருவார் என்று நம்புகிறேன்'' என பதிவிட்டுள்ளார். (அ)

## தமிழ்த் தேசிய தரப்புகள்...

அத்துடன், பொருளாதார நெருக்கடி மற்றும் இனப்பிரச்னைக்கு கூட்டுத்தீர்வுகளை காண்பதற்கு சிங்கள, முஸ்லிம்கள் மத்தியில் உள்ள முற்போக்கான தரப்புகளை நோக்கி நேசக்கரங்களை நீட்டுங்கள் என்பதும் இந்த தருணத்தில் தமிழ்த் தேசியவாத அரசியலுக்கான எனது ஆலோசனை என்றும் அவர் கூறியுள்ளார்.

திருகோணமலையில் இயங்கும் சிந்தனைக்கூடம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த நேர்காணலில், அவரிடம் “தற்போதைய தருணத்தில் தமிழ் தேசியவாத அரசியலுக்கான உங்கள் ஆலோசனை என்ன? இந்த நெருக்கடிகள் காரணமாக இலங்கை அரசியலில் ஆழமான மாற்றங்கள் ஏற்படும் என கருதுகின்றீர்களா? என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன. இவற்றுக்கு பதிலளித்த அவர்,

“அமைதியான வழிமுறைகைளை தொடர்ந்தும் பின்பற்றுங்கள் -அர்த்தபூர்வமான மாற்றங்களுக்காக பொதுவான தமிழ் முன்னணியை உருவாக்குங்கள், பொருளாதார நெருக்கடி மற்றும் இனப்பிரச்னைக்கு கூட்டுத்தீர்வை காண்பதற்கு சிங்கள, முஸ்லிம்கள் மத்தியில் உள்ள முற்போக்கான தரப்புகளை நோக்கி நேசக்கரங்களை நீட்டுங்கள்”,என்றார்.

மேலும், இலங்கை விவகாரத்தை உன்னிப்பாக அவதானிப்பவர் என்ற அடிப்படையில் ராஜபக்ஷ பரம்பரையின் எதிர்பாராத வீழ்ச்சி குறித்த உங்கள் கருத்து என்ன? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர்,

“ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியின் வேகம் பல அவதானிகளுக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. அவர்கள் மிகப்பெரும் பெரும்பான்மையை பெற்று மூன்று வருடங்களே ஆகின்றன. அதிகாரத்தை ஒரே குடும்பத்திடம் அதிகளவு குவித்தமையும், பொருளாதாரத்தை திறமையற்ற விதத்தில் கையாண்டமையும் இந்த வீழ்ச்சிக்கு காரணம். கோவிட் பரவலால் சுற்றுலாப்பயணிகள் வராததால் பெருமளவு வருமானத்தையும், வெளிநாட்டில் உள்ள இலங்கை தொழிலாளர்களின் வருமானத்தையும் அவர்கள் இழந்தனர். அந்த வகையில் அவர்கள் துரதிர்ஷ்டசாலிகள். இறுதியில் வாழ்க்கை செலவீனங்கள் நாளாந்தம் அதிகரித்ததும் எரிபொருள் பற்றாக்குறையையும் இலங்கையர்கள் தாங்கிக்கொள்ள முடியாத விடயங்களாகக் காணப்பட்டன” - என்றார்.

யுத்தத்துக்கு பிந்திய இலங்கை முடிவற்ற விதத்தில் நிச்சயமற்றதாக -ஸ்திரமற்றதாக காணப்படுகின்றது. 2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றம் இலங்கையில் ஜனநாயக கட்டமைப்புகள் மீண்டும் வலுப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது, எனினும் 2019 இல் ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தவுடன் அது முழுமையாக தோல்வியடைந்தது, நாடு தற்போது மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ? இலங்கை ஏன் தொடர்ந்தும் அரசியல் ரீதியில் நோயுற்றதாக காணப்படுகின்றது? என்ற கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

“பல தசாப்த கால நெருக்கடிகளுக்கு பின்னரும் சிங்கள - பௌத்தர்கள் ஆதிக்கம் செலுத்தும் கொள்கையில் சிறுபான்மை தமிழர்கள் முஸ்லிம்களுக்கான சுயாட்சி என்ற விடயத்துக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. அனைத்து மக்களுக்கும் ஏற்ற விதத்தில் இந்த விவகாரத்துக்கு தீர்வை காணவேண்டும் என இலங்கை பிடிவாதம் பிடிக்கின்றது.

இதற்கப்பால் சிங்கப்பூரின் லீ குவான் யூ அல்லது இந்தியாவின் நரேந்திரமோடி போன்றவர்கள் வழங்கிய தொலைநோக்குடன் கூடிய தலைமைத்துவத்தை வழங்ககூடிய தலைவர்கள் இலங்கைக்கு கிடைக்கவில்லை. ஸ்திரமான அபிவிருத்தியடையும் பொருளாதாரம் அனைவருக்கும் நன்மையளிக்கும். அரசாங்கங்கள் நிதியை செலவிடுவதை மாத்திரம் முன்னெடுக்க முடியாது, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு உறுதியான தனியார் துறையை கட்டியெழுப்பவேண்டும், வரவு - செலவுதிட்டத்தை சமப்படுத்தக்கூடிய வரிகளை அறிமுகப்படுத்த வேண்டும்”, என்றார்.

இதேபோல, “ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆளும் அரசியலில் நுழைந்துள்ளார். இதனை எப்படி பார்க்கிறீர்கள் - சமாதான அனுசரணையாளர் என்ற அடிப்படையில் நீங்கள் அவருடன் நெருங்கி பணியாற்றினீர்கள் - விமர்சனங்களிற்கு அப்பால் தற்போதைய நெருக்கடியை கையாளக்கூடியவர் அவர்தான் என சிலர் கருதுகின்றனர். பொருளாதார நிலையை ரணில் விக்கிரமசிங்கவால் திறமையான விதத்தில் கையாள முடியும் என நீங்கள் கருதுகின்றீர்களா? என்று எழுப்பப்பட்ட வினாவுக்கு,

“மிகவும் நெருக்கடியான தருணத்தில் எனது நண்பர் ரணிலுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். ரணிலை விட தற்போதைய பொருளாதாரத்தை சிறப்பாக புரிந்துகொள்ளக் கூடிய - பேச்சுக்களில் சிறப்பாக ஈடுபடக் கூடிய வேறு ஒரு தற்போதைய இலங்கை தலைவரை நினைத்துப் பார்ப்பது கடினம். இதற்கு அப்பால் ரணில் ஒரு சிறந்த பண்பார்ந்த மனிதர்.

ஆனால், ராஜபக்ஷக்களை வீழ்த்தியவர்களின் நம்பிக்கையை பெறுவதற்கு அவர் இன்னமும் நீண்டதூரம் செல்ல வேண்டும். இலங்கையின் இளைஞர்களின் கரிசனைகளை செவிமடுப்பதற்கும், நீண்ட கால தீர்வுகளுக்கு அவர்களின் பலத்தை உள்வாங்குவதற்கும் அவர்களை நோக்கி ரணில் விக்கிரமசிங்க தனது நேசக்கரத்தை நீட்டவேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## உயர்தர...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு அறிவிப்பு விடுத்தார்.

2022 ஓகஸ்ட்டில் நடைபெறவிருந்த உயர்தரப்பரீட்சையை ஒக்ரோபரில் நடத்துவதற்கு தயாராகி வருகின்றோம். அதற்கு முன்னர் பரீட்சை நடைபெறச் சாத்தியம் இல்லை. புலமைப்பரிசில் பரீட்சையும் ஒக்ரோபரில் நடைபெறும்.

இதற்கான பேச்சுகள் இடம்பெறுகின்றன, இவை இறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## மின்சாரம்...

அன்ரன் ஜினேசன் ஜினேஜினி என்ற 4 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

சிறுமியின் உடல் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## வேகமாக...

வாகியுள்ளனர். அதிகளவிலான தொற்றாளர்கள் கொழும்பில் பதிவாகியுள்ளனர். அடுத்த இடங்களில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கேகாலை, கண்டி, காலி, இரத்தினபுரி மாவட்டங்கள் உள்ளன.

கடந்த 3 மாதங்களாக டெங்கு நோயாளர் தொகை அதிகரித்து வரும் நிலையில், தென்மேற்கு பருவ மழையால் எதிர்வரும் நாட்களில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கும். எனவே பொதுமக்கள் நோய் வராமல் தடுக்க வீடுகள், அலுவலக வளாகங்கள், பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடி, கோவிட் 19 தாக்கம் காரணமாக டெங்கு கட்டுப்பாடு புறக்கணிக்கப்பட்டது. இதன் விளைவே டெங்கு தொற்று அதிகரிப்பு. 24 மணி நேரத்துக்கு மேலாக காய்ச்சல் நீடித்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறுவதும் அவசியம் என்றும் அவர் அறிவுறுத்தினார். (ஐ)

# களுவாஞ்சிக்குடியில் திருட்டு; சந்தேகநபர் கைது!

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒந்தாச்சிமடத்தில் வீடு ஒன்றிலிருந்து அண்மையில் 85,000 ரூபாய் பணமும், ஒரு கைபேசியும் திருடப்பட்ட சம்பவத்தில் சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டார்.

களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி வழிகாட்டலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். (ஐ)

## கச்சதீவை...

பேசித் தீர்த்து செயல்பட வேண்டும்”, என வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம் தெரிவித்தார் .

யாழ்ப்பாணத்தில்அவர்நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

மேலும், இலங்கை தமிழர்களுடைய பிரச்னைகளில் கூடுதலான கரிசனை எடுக்கின்ற தலைவர்களில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலினையும் ஒருவராகக் கருதுகின்றோம்.

தமிழக மீனவர்களின் மீன்பிடியானது கச்சதீவு வரை செல்லவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், கச்சதீவை மீண்டும் வழங்குமாறு கேட்டுள்ளார்கள் .

வட, கிழக்கு மீனவர்கள் தொழில் புரியும் கடற்கரையோரங்களில், சிங்கள மீனவ தொழிலாளர்களின் சுரண்டல் மற்றும் தமிழக மீனவர்களின் சுரண்டலால் தமிழ் மக்கள் பெரும் பிரச்னைகளை எதிர்நோக்குகின்றனர். எனவே, இரண்டு பக்கங்களிலும் உள்ள பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக முதல்வர் எடுப்பதுடன் , இலங்கை வாழ் தமிழர்களையும் தனது தமிழ் மக்களாக பார்க்க வேண்டும்.

கச்சதீவை தமிழகம் மீள பெறுவதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிப்படையும் என்பதை தமிழக முதல்வர் அனுதாபத்துடன் அணுகி, கச்சதீவை மீளப்பெறுவதற்கான விடயங்களை வலியுறுத்தாது இரு சாராரிடமும் பேசி தீர்த்து செயல்படுவது என்பது அவரால் மாத்திரமே முடியும்.

இதேவேளை 21 ஆம் திருத்தத்தில் ஆரம்பத்தில் உள்ள மொழி , மத உரிமை, மனித அடிப்படை உரிமை அப்படியே இருக்கத்தக்கதாக 20ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீள பாராளுமன்றத்திற்கு போகிற வேலையே தவிர, தமிழ் மக்களுக்கு சார்பான, தீர்வான எந்த விடயங்களும் 21 ஆம் திருத்தத்தில் இல்லை.

மக்களுக்கு சார்பான விடயமாக எந்த விடயங்களும் 21 ஆம் திருத்தத்தில் இல்லை . இது அபரீவிதனமான அதிகாரங்களை தொடர்ந்தும் தக்க வைப்பதற்கான ஏற்பாடுகளாவே நான் பார்க்கிறேன். எனவே 20 ஆவது திருத்தமோ 21 ஆவது திருத்தமோ வரப்போவதில்லை என்பது எனது சொந்தக்கருத்து - என் றார்.

## உர இறக்குமதி...

என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், அனைத்து விவசாயிகளுக்கும் உரம் கொள்வனவு செய்ய அரசு நிதியுதவி அளிக்கும். அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் உரம் இறக்குமதி செய்வதில் அரசாங்கத்தின் பணத்தை மோசடி செய்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்றும் கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (ஐ)

## குளத்தில்...

முயற்சியில் ஈடுபட்டனர். இருவர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், ஆபத்தான நிலையில் உடனடியாக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

ஏனைய இருவரையும் பொலிஸார், இராணுவத்தினரும் இணைந்து தேடினர். இதில், மற்றைய இரு மாணவர்களின் சடலங்களுமே மீட்கப்பட்டன.

சடலமாக மீட்கப்பட்ட இரு மாணவர்களின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## உலகுக்கே...

சாட்டை அவர் முன்வைத்தார்.

மேலும், “எமது நாடு பிச்சை எடுக்கும் நாடு அல்ல. பிற நாடுகளுக்கும் உணவளித்து உதவிய நாடு. எமது நாடு மாபெரும் தேசம் என்று எமது தலைவர்கள் கூறி வருகின்றனர். தற்போது அந்த மாபெரும் தேசமானது நாடு விட்டு நாடு சென்று பிச்சை எடுத்து சாப்பிடும் நிலைக்கு சென்றுவிட்டது.

எமது நாடு இந்த நிலைமைக்கு சென்றதற்கு அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். தற்போது எமது அரசியல்வாதிகள் ஆட்சியை கைப்பற்றும் வழிமுறை தொடர்பாகவே சிந்தித்து வருகின்றனர்.

எமது நாட்டை வீழ்ச்சியடைந்த இடத்தில் இருந்து எப்படி மீட்பது என்று சிந்திக்க வேண்டும். ஆனால், அவர்கள் பிச்சை எடுக்கும் நாடு என்ற நிலையை ஆயுதமாக பயன்படுத்தி அதிகாரத்தை அடைய முயற்சிக்கின்றனர்.

ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வது? செய்வதற்கு ஏதாவது உள்ளதா? தற்போது யாரும் தனியாகப் பயணிக்க முடியாது என்பதை நான் புரிந்து கொண்டுள்ளேன். அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவில்லை எனில் சிறிது காலத்தில் நாம் அனைவரும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக வேண்டி வரும்.

நாடு அனைத்து துறைகளிலும் அதலபாதாளத்துக்கு சென்றுவிட்டது. ஒரே இரவில் உரம் தடை செய்யப்பட்டது. அதன் முடிவுகள் தற்போது கிடைத்துள்ளன. விவசாயம் முற்றாக செயலிழந்துவிட்டது.

உணவு இருந்தால்தான் ஒரு நாடு வாழ முடியும். உணவு உண்ண மனிதன் இல்லாத நாட்டை எப்படி ஆள்வது? எந்த நாட்டிலும் யார் அரசியல்வாதிகளாக உருவானாலும் அந்த நாட்டில் வாழும் மக்கள் உயிர் வாழ வேண்டும். பசியால் வாடும் மக்களுக்கு அரசமைப்பு சட்டம் புரிவதில்லை. அதிகாரத்தையும் மக்களையும் கட்டியெழுப்புவதற்கு இது உதவப் போவதும் இல்லை. ஆனால், அதிகாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நேரம் உள்ளது.

ஒரு மகத்தான தேசமாகவும் பணிகளை செய்யவும் அனைவரும் ஒன்றிணைவோம். இந்த நாட்டை காப்பாற்ற அனைவரும் ஒன்றுபடுவோம் - என்றார். (ஐ)

## சவேந்திரவின்...

தனது பிரியாவிடை உரையை ஆற்றியிருந்தார்.

அதில், “எனது பதவிக் காலத்தில், சந்தேகத்துக்கிடமான நடத்தை, நெகிழ்வான ஆளுமை அல்லது நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றை நான் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. இராணுவத் தளபதி என்ற வகையில், நாட்டு மக்கள் எங்களிடம் எதிர்பார்க்கும் சேவையை வழங்கவோ அல்லது சவாலான காலங்களில் இராணுவத்தின் கண்ணியம் மற்றும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தவோ நான் ஒருபோதும் அனுமதிக்கவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆளுமை பல்வேறு வழிகளில் அம்பலப்படுத்தப்பட்டதாக பரவலாக ஒரு கருத்து நிலவுகின்றது. குறிப்பாக கோட்டாபய இராணுவத்தை விட்டு வெளியேறி அமெரிக்காவுக்கு தப்பிச் சென்றமை தொடர்பில் சமூக ஊடகங்களில் மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்த உரையே ராஜபக்ஷக்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக புதன்கிழமை வெளியிடப்பட்ட இணைய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அரசியல், பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு இளம் தொழில் நிபுணர்களிடமிருந்து முன்மொழிவு!

கொழும்பு, ஜூன் 03

தேசிய கொள்கைக்கான தொழில் வல்லுநர்களின் கூட்டமைப்பு, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழில் வல்லுநர்கள் மற்றும் இளைஞர்கள் குழுவினர், தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையை தீர்ப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் அடங்கிய சுருக்கமான ஆலோசனைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் வைத்தே இந்த முன்மொழிவுகள் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டன.

தற்போதைய அரசியல், சமூக மற்றும் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் மற்றும் மக்களுக்கு நட்பான புதிய அரசியலமைப்பொன்றை நிறைவேற்றிக் கொள்வது பற்றி இதன்போது கலந்துரையாடப்பட்டது.

11 அடிப்படை விடயங்களைக் கொண்ட பிரேரணையை ஆராய்ந்த பின்னர், அடுத்த சில நாட்களுக்குள் அடுத்த கலந்துரையாடலை நடத்துவதற்கு இங்கு இணக்கம் காணப்பட்டது.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பல்வேறு துறைகளில் நிபுணர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல குழுக்கள் தயாராக இருப்பதாகவும், அந்த குழுக்களின் சாதகமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அதிகாரங்களையும் மற்றும் வளங்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு தான் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

குறிப்பிட்ட இலக்குகளுடன் கூடிய அபிவிருத்தி வேலைத்திட்டம் வருடாந்தம் அனைத்து அமைச்சுக்களுக்கும் வழங்கப்பட வேண்டுமெனவும், காலாண்டுக்கு ஒருமுறை அந்த இலக்குகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இலக்குகளை அடையத் தவறிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அப்பதவிகளில் இருந்து நீக்குவதன் அவசியமும் இம்முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

பேராசிரியர் வண. பாத்தேகம ஞானிஸ்ஸர, சாஸ்திரபதி வண. வித்தியல கவிதஜ தேரர்கள் மற்றும் தேசிய கொள்கைக்கான தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வைத்தியர் அசோக ஜயசேன, சட்டத்தரணி நெலும் வேரகொட ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு போராட்டத்தில் தொடர்புடைய தொழில் வல்லுனர்கள் மற்றும் இளைஞர் குழு ஒன்றும் இதில் கலந்துகொண்டனர். (அ)



## சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ராஜித தமிந்த கிழக்குக்கு நியமனம்

மட்டக்களப்பு, ஜூன். 03

கிழக்கு மாகாண புதிய சிரேஸ்ட பிரதிபொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றுள்ளள ராஜித சிறி தமிந்த தமது கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.00 மணியளவில் மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பணிமனையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் கந்தளாய் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட மாகாண மற்றும் மாவட்ட உயர்பொலிஸ் அதிகாரிகள் அடங்லாக சர்வமதத் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையையும் புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஏற்றுக்கொண்டார்.

## இலங்கைக்கு தேவைப்படும் 18 ஆயிரம் மருந்து வகைகள்

### உதவ முன்வந்தது உலக சுகாதார அமைப்பு

கொழும்பு, ஜூன் 03

இலங்கைக்கு அத்தியவசிய மருந்துகளை பெற்றுக் கொடுக்க தலையீடுகளை மேற்கொள்ள உலக சுகாதார அமைப்பு தீர்மானித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இலங்கை எதிர்நோக்கும் மருந்து தட்டுப்பாடு சம்பந்தமாக விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் உலக சுகாதார அமைப்பு இந்த முடிவை எடுத்துள்ளது.

இதற்கு முன்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்தன, உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்திருந்தார்.

இலங்கைக்கு 18 ஆயிரம் மருந்து வகைகள் தேவைப்படுவதாக உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த மருந்துகளை மூன்று மற்றும் ஆறு மாத காலத்துக்குள் வழங்க முடியுமா என்பதை உலக சுகாதார அமைப்பு ஆராய்ந்து வருகிறது.

இந்த மருந்துகளில் 20 வகைக்கும் மேலான மருந்துகள் அத்தியவசியமாக தேவைப்படும் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை வழங்குமாறு இலங்கை பிரதிநிதிகள் உலக சுகாதார அமைப்பிடம் கோரியுள்ளனர்.

இலங்கைக்கு தேவையான மருந்துகளை பெற்றுக் கொடுப்பதற்காக சுகாதார அமைப்பு ஏனைய உலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அதே வேளை சீனா வழங்கியுள்ள மருந்து தொகை அடுத்த மூன்று நாடகளில் கிடைக்க உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில்வைத்தியசாலைகளில் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதன் காரணமாக நோயாளிகள் மூலம் தனியார் மருந்தங்களில் இருந்து மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு சிகிச்சை வழங்கப்படுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

## பல்கலை மாணவர் போராட்டத்துக்கு தடை விதிக்குமாறு கோரிய பொலிஸ்

### கொழும்பு நீதிமன்றம் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 03

கொழும்பில் பல்லைக்கழக மாணவர்கள் முன்னெடுக்கவுள்ள பேரணிக்கு தடை விதிக்குமாறு, பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பல்லைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து நெலும் பொக்குண தொடக்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வரை முன்னெடுக்கவுள்ள பேரணிக்கு தடை விதிக்குமாறு, கறுவாத்தோட்டம் பொலிஸார் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

இதனை நிராகரித்த கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, பாதசாரிகள் சட்டம் ஒழுங்கை மீறும் வகையில் செயற்பட்டால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 95ஆவது பிரிவின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளதாக சுட்டிக்காட்டினார். (அ)

## பதவி விலக தயாராகிறார் ஜனாதிபதியின் ஆலோசகர்

கொழும்பு, ஜூன் 03

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க, அந்த பதவியில் இருந்து விலக தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பை உயர் நீதிமன்றம் இரத்துச் செய்தமையே இதற்காக காரணம் என கூறப்படுகிறது.

ஜனாதிபதி கோட்டாபய தன்னிச்சையாக எடுக்கும் நடவடிக்கைகள் காரணமாக பல்வேறு துறைகளில் இருக்கும் ஜனாதிபதியின் ஆலோசகர்கள் தற்போது கடும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக பேசப்படுகிறது.

இவர்களில் சிரேஷ்ட ஆலோசகரான லலித் வீரதுங்க மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவருக்கு நெருக்கமான தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமை காரணமாக லலித் வீரதுங்க உட்பட சிலர் மிக விரைவில் பதவிகளில் இருந்து விலகுவார்கள் என தகவல்கள் கூறுகின்றன.

லலித் வீரதுங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளராக கடமையாற்றியதுடன் கோட்டாபய ஜனாதிபதியாக தெரிவான பின்னர், அவரது சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். (அ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 16 - 10 - 1938



மறைவு 31 - 05 - 2022

### திருமதி பாக்கியலட்சுமி சிவபாதசுந்தரம்

வேம்படி வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா Brisbane ஐ வதிவிடமாகவும் கொண்ட பாக்கியலட்சுமி சிவபாதசுந்தரம் அவர்கள் 31.05.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தங்கம்மா, நவரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (பயில்வான் அப்பா) பரமநாயகி தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவபாதசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான உருத்திராபதி, மஹாலட்சுமி, சோமசேகரம் மற்றும் பொன்னம்பலம், தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான ராஜலட்சுமி, ராதாகிருஷ்ணன் மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் சகோதரியும்,சிவகாமசுந்தரி, சிவசுந்தரம், காலஞ்சென்றவர்களான மகாலட்சுமிதேவி, சிவயோகசுந்தரம், சிவஞானசுந்தரம், சிவனருள்சுந்தரம், சிவநேசசுந்தரம் மற்றும் சிவலோகசுந்தரி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,தங்கநாயகி, கௌரிநாயகி, ஹரீந்திரன், வள்ளிநாயகி, கந்தசாமி, தெய்வநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தலிங்கம், ஸ்ரீராமநாதன், ஸ்ரீரதன், ரதிமலர், விஷ்ணுலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், காயத்திரி கணேந்திரன், சங்கீதா ஸ்ரீகுமரன், கீர்த்தனா ராகவன், ஜனனி முகுந்தன், ரமணன், தனுஷா, சுருதிகா, அனுஸ்கா, ஹேரம்பன், விதுஷன் மற்றும் சுபானி ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,தாட்ஷா, அக்ஸரா, பிரித்திஷா மற்றும் சுகன் ஆகியோரின் செல்லப் பூட்டியும் ஆவார்.

**தகனம்:**
Sunday, 05 Jun 2022 10:00 AM
Mt Thompson Memorial Gardens and Crematorium 329 Nursery Rd, Holland Park QLD 4121, Australia

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

User name: hollandpark@ghmfunerals.com.au
Password: CU69XC

தகவல்:
**ஹரீந்திரன் - மகன்**

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| **தங்கநாயகி - மகள்** | Mobile : +14167475747 |
| **கௌரிநாயகி - மகள்** | Mobile : +17184516489 |
| **ஹரீந்திரன் - மகன்** | Mobile : +16478597931 |
| **வள்ளிநாயகி - மகள்** | Mobile : +61402258339 |
| **கந்தசாமி - மகன்** | Mobile : +41799162021 |
| **தெய்வநாயகி - மகள்** | Mobile : +61425898049 |
| **ரமணன் - பேரன்** | Mobile : +61481393809 |


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-காஞ்சனா-02,இசை திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10

**இரவு**

7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன் - நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - வெகுஜனப்போராட்டங்கள்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவம் ஒளி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு